**தலைப்பு 103 - பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2012 ஆம் ஆண்டு**

இந்த அறிக்கை 2 பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

1 ஆம் பகுதி - அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை

2 ஆம் பகுதி - ஒவ்வொரு தலைப்புக்குமான விபரமான அறிக்கை

## 1 ஆம் பகுதி

**பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் மீதான சுருக்கமான அறிக்கை**

**1. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்**

| தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
|---|---|
| 222 | இலங்கை தரைப்படை |
| 223 | இலங்கை கடற்படை |
| 224 | இலங்கை வான்படை |
| 225 | பொலிஸ் திணைக்களம் |
| 226 | குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் |
| 227 | ஆட்பதிவுத் திணைக்களம் |
| 291 | கரையோரம் பேணல் திணைக்களம் |
| 320 | சிவில் பாதுகாப்புத் திணைக்களம் |
| 325 | இலங்கை கடற்கரை பாதுகாப்புத் திணைக்களம் |

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 09 திணைக்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 244,205,807,595 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை இதில் ரூபா 238,572,848,634 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க, அமைச்சு மற்றும் ஒவ்வொரு

திணைக்களத்தின் நிதி ஏற்பாடுகளிலிருந்தான தேறிய சேமிப்புக்கள் ரூபா 11,114,396 இற்கும் ரூபா 4,475,173,744 இற்கும் இடைப்பட்ட வீச்சில் பல்வேறு அளவில் அல்லது மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் 0.001 சதவீத்திற்கும் 33.69 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டன. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| தலைப்பு | அமைச்சு/ திணைக்களம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய நிதியேற்பாடு | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்பாடு | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேமிப்பு | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டு வருபவை | மூலதனம் | மீண்டு வருபவை | மூலதனம் | மீண்டு வருபவை | மூலதனம் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 103 | பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சு | 6,968,085,000 | 8,329,590,000 | 6,658,402,799 | 4,164,098,457 | 309,682,201 | 4,165,491,543 |
| 222 | இலங்கைத் தரைப்படை | 114,298,350,000 | 3,819,416,000 | 114,286,778,619 | 3,817,081,187 | 11,571,381 | 2,334,813 |
| 223 | இலங்கை கடற்படை | 33,208,492,753 | 4,796,860,000 | 33,020,787,087 | 4,742,919,479 | 187,705,666 | 53,940,521 |
| 224 | இலங்கை வான்படை | 21,050,975,000 | 3,649,703,842 | 20,983,577,120 | 3,247,441,757 | 67,397,880 | 402,262,085 |
| 225 | பொலிஸ் திணைக்களம் | 35,768,000,000 | 1,067,000,000 | 35,609,094,692 | 1,008,268,879 | 158,905,308 | 58,731,121 |
| 226 | குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் | 608,050,000 | 86,950,000 | 598,655,538 | 85,230,066 | 9,394,462 | 1,719,934 |
| 227 | ஆட்பதிவுத் திணைக்களம் | 204,540,000 | 47,050,000 | 175,212,890 | 42,520,951 | 29,327,110 | 4,529,049 |
| 291 | கரையோரம் பேணல் திணைக்களம் | 138,010,000 | 770,000,000 | 137,848,105 | 644,766,113 | 161,895 | 125,233,887 |
| 320 | சிவில் பாதுகாப்புத் திணைக்களம் | 9,258,,745,000 | 59,700,000 | 9,245,633,317 | 53,942,117 | 13,111,683 | 5,757,883 |
| 325 | இலங்கை கடற்கரை பாதுகாப்புத் திணைக்களம் | 29,640,000 | 46,650,000 | 26,731,069 | 23,858,392 | 2,908,931 | 22,791,608 |
| | **மொத்தம்** | **221,532,887,753** | **22,672,919,842** | **220,742,721,236** | **17,830,127,398** | **790,166,517** | **4,842,792,444** |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்**

பல்வேறு கருமங்களுக்காக ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களினால் பின்வருமாறு ரூபா 265,650,475 கூட்டுமொத்தமான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் பயன்பாடு தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றது.

| அமைச்சு /திணைக்களம் | கிடைத்த நிதி ஏற்பாடு | பயன்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேமிப்பு | சேமிப்பு தொடர்பான அவதானிப்பு, சுருக்கமாக |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| கல்வி அமைச்சு | 201,670,475 | 177,697,176 | 23,973,299 | போதியளவில் கட்டுநிதி கிடைக்காமை மற்றும் சிட்டைகள் கிடைக்காமை |
| பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 30,980,000 | 20,089,898 | 10,890,102 | -மேற்படி- |
| பௌத்த சாசன மற்றும் மத விவகார அமைச்சு | 25,000,000 | - | 25,000,000 | ஆண்டின் இறுதியில் ஏற்பாடு கிடைத்தல் |
| போக்குவரத்து அமைச்சு | 8,000,000 | 6,823,658 | 1,176,342 | சிட்டைகள் கிடைக்காமை |
| மொத்தம் | 265,650,475 | 204,610,732 | 61,039,743 | |

## 2.2 வருமானக் கணக்கு

**மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

அமைச்சினால் 2012 ஆம் ஆண்டில் 04 வருமான குறியீடுகளிற்காக ரூபா 5,893,950,000 வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 6,457,977,191 வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 109.57 சதவீத வருமானம் சேகரித்துக் கொள்ளப்பட்டிருந்தது. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் | வருமானக் குறியீடு | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | மிகை / (குறை) சேகரிப்பு | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தின் சதவீதமாக சேகரிக்கப்பட்ட வருமானம் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | % |
| பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் | 10.03.02.05 | 12,250,000 | 11,611,124 | (638,876) | 94.78 |
| விமானப் படைத்தளபதி | 20.03.02.16 | 90,000,000 | 164,876,444 | (25,123,556) | 86.7 |
| குடிவரவு குடியகழ்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் | 20.03.02.07 | 5,622,500,000 | 6,197,728,729 | 575,228,729 | 110.23 |
| ஆட்பதிவு ஆணையாளர் நாயகம் | 20.03.02.03 | 69,200,000 | 83,760,894 | 14,560,894 | 121.04 |
| மொத்தம் | | 5,893,950,000 | 6,457,977,191 | 564,027,191 | |

## 2.3 முற்பணக் கணக்குகள்

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 08 திணைக்களங்களிற்காக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட பின்வரும் எல்லைகள் பின்பற்றப்பட்டிருந்தன.

| தலைப்பு | விடய இல. | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|---|
| | | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை | ஆகக்குறைந்த எல்லை | உள்ளபடியானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 103 | 10301 | 250,000,000 | 11,190,863 | 113,200,000 | 131,842,760 | 650,000,000 | 373,591,963 |
| 222 | 22201 | 2,135,000,000 | 1,454,431,929 | 1,750,000,000 | 1,769,144,045 | 4,250,000,000 | 2,654,291,082 |
| 223 | 22301 | 590,000,000 | 346,170,525 | 340,000,000 | 394,751,911 | 1,000,000,000 | 550,122,841 |
| 224 | 22401 | 500,000,000 | 334,360,110 | 440,000,000 | 444,527,757 | 1,802,000,000 | 728,967,498 |
| 225 | 22501 | 1,585,000,000 | 1,087,170,194 | 1,000,000,000 | 1,348,558,680 | 5,000,000,000 | 2,774,362,108 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 226 | 22601 | 25,000,000 | 22,405,999 | 19,000,000 | 25,815,252 | 154,000,000 | 120,167,682 |
| 227 | 22701 | 25,000,000 | 15,140,122 | 15,000,000 | 20,975,140 | 95,000,000 | 43,052,808 |
| 291 | 29101 | 15,000,000 | 8,205,822 | 8,000,000 | 10,396,023 | 66,900,000 | 39,784,895 |
| 320 | 32001 | 170,000,000 | 159,476,252 | 155,000,000 | 159,581,714 | 150,000,000 | 6,066,563 |

### 2.3.2 வர்த்தக முற்பணக் கணக்கு

அமைச்சின் கீழுள்ள ஒரு திணைக்களத்தினால் வர்த்தக முற்பணக் கணக்கொன்று பேணிவரப்பட்டிருந்தது.

#### (அ) பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

வர்த்தக முற்பணக் கணக்கு நடவடிக்கைக்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த பின்வரும் எல்லைகள் பின்பற்றப்பட்டிருந்தன.

| தலைப்பு | விடய இல. | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|---|
| | | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை | ஆகக்குறைந்த எல்லை | உள்ளபடியானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 223 | 22302 | 550,000,000 | 531,396,869 | 525,000,000 | 549,221,761 | 550,000,000 | 30,676,133 |

#### (ஆ) நிதி விளைவுகள்

வர்த்தக முற்பணக் கணக்கின் நிதி விளைவுகள் பின்வருமாறாகும்.

| திணைக்களம் | விடய இல. | முற்பணக் கணக்கு நடவடிக்கை | நிதி விளைவுகள் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | 2012 | | 2011 | |
| | | | கருதுகோள் கட்டணம் நீங்கலாக இலாபம் | கருதுகோள் கட்டணம் அடங்கலாக இலாபம் | கருதுகோள் கட்டணம் நீங்கலாக இலாபம் | கருதுகோள் கட்டணம் அடங்கலாக இலாபம் |
| | | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| இலங்கை கடற்படை | 22302 | வெடி பொருட்களை விற்பனை செய்தல் | 124,278,407 | 100,441,226 | 123,285,298 | 101,615,133 |

## 2.4 கட்டுநிதி மற்றும் பொதுவைப்புக் கணக்குகள்

### (அ) கட்டுநிதிக் கணக்கு

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 07 திணைக்களங்களில் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் கட்டுநிதிக் கணக்குகளில் ரூபா 29,600,861,835 வரவு மீதி காணப்பட்டது. விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| **அமைச்சு/ திணைக்களம்** | **2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** |
|---|---|
| | ரூபா |
| பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு | 20,527,173,852 |
| இலங்கை தரைப்படை | 6,728,479,076 |
| இலங்கை கடற்படை | 646,711,593 |
| இலங்கை வான்படை | 1,639,163,584 |
| பொலிஸ் திணைக்களம் | 22,247,327 |
| கரையோரம் பேணல் திணைக்களம் | 378,713 |
| சிவில் பாதுகாப்புத் திணைக்களம் | 36,518,363 |
| இலங்கை கடற்கரை பாதுகாப்புத் திணைக்களம் | 189,327 |
| மொத்தம் | 29,600,861,835 |

### (ஆ) பொதுவைப்புக் கணக்கு

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 09 திணைக்களங்களின் பொதுவைப்புக் கணக்குகளிலுள்ள மீதிகள் ரூபா 6,783,111,939 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அது தொடர்பான விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| **அமைச்சு/ திணைக்களம்** | **கணக்கு இல.** | **2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** |
|---|---|---|
| | | ரூபா |
| பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு | 6000/0000/00/0011/0555/000 | 4,675,280 |
| | 6000/0000/00/0015/0017/000 | 1,015,993,820 |
| இலங்கை தரைப்படை | 6000/0000/00/0015/0103/000 | 198,855,565 |
| | 6000/0000/00/0011/0583/000 | 5,220,208 |
| | 6000/0000/00/0007/0039/000 | 5,000,000,000 |
| இலங்கை கடற்படை | 6000/0000/00/0001/0012/000 | 36,500 |
| | 6000/0000/00/0002/0013/000 | 3,974,486 |
| | 6000/0000/00/0015/0104/000 | 216,093,418 |
| | 6000/0000/00/0011/0584/000 | 1,743,436 |
| இலங்கை வான்படை | 6000/0000/00/0015/0105/000 | 63,641,018 |
| பொலிஸ் திணைக்களம் | 6000/0000/00/0011/0586/000 | 16,154,891 |
| | 6000/0000/00/0015/0106/000 | 167,109,562 |
| குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் | 6000/0000/00/0015/0107/000 | 1,669,284 |
| | 6000/0000/00/0011/0587/000 | 9,134,495 |
| ஆட்பதிவுத் திணைக்களம் | 6000/0000/00/0015/0108/000 | 5,350,482 |
| | 6000/0000/00/0001/0015/000 | 7,908 |
| கரையோரம் பேணல் திணைக்களம் | 6000/0000/00/0003/0024/000 | 9,342,589 |
| | 6000/0000/00/0003/0146/000 | 24,422,559 |
| சிவில் பாதுகாப்புத் திணைக்களம் | 6000/0000/00/0015/0166/000 | 39,598,023 |
| இலங்கை கடற்கரை பாதுகாப்புத் திணைக்களம் | 6000/0000/00/0015/0171/000 | 88,415 |
| மொத்தம் | | 6,783,111,939 |

# பகுதி 2

## ஒவ்வொரு தலைப்பு தொடர்பான விபரமான அறிக்கை

### 1. தலைப்பு 103 – பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானம் கணக்கு, என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 ஒக்தோபர் 28 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பன இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (ஊ) வரையான பொது

அவதானிப்புக்கள் மற்றும் 1.4 இலிருந்து 1.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்**

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சினால் 2013 மார்ச் 31 ஆந் திகதியளவில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய தேசிய பாதுகாப்பு நிதியக் கணக்கு 03 மாத தாமதத்தின் பின்னர் 2013 யூன் 26 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்களைப் பேணாமை**

அமைச்சினால் கீழே காட்டப்பட்டள்ள பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

| பதிவேட்டின் வகை | தொடர்புடைய பிரமாணம் |
|---|---|
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| கணனிகள், துணைச்சாதனங்கள் மற்றும் மென்பாகங்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

**(இ) கட்டுநிதிக் கணக்கு**

ஹோட்டல் தொழிலின் அபிவிருத்திக்காக இரண்டு வெளிநாட்டு கம்பனிகளுக்கு வழங்கப்பட்டிருந்த அரசாங்க காணிக்காக கிடைத்திருந்த ரூபா 19,817,306,000 தொகை, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 149 ஆம் உறுப்புரையின் பிரகாரம் திரட்டிய நிதியத்திற்கு செலவு வைக்கப்படத்தக்கவாறு திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்படாது அமைச்சின் கட்டுநிதியக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது. அத் தொகை அமைச்சினால் முதலீடு செய்யப்பட்டு 2011 ஆம் ஆண்டில் ரூபா 800,031,971, 2012 ஆம் ஆண்டில் ரூபா 2,102,216,528 என ரூபா 2,902,248,499 மொத்தமான வட்டித் தொகை பெறப்பட்டிருந்தது. அகுரேகொட அமைச்சுக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் பாராளுமன்றத்தினால் முறையே ரூபா 100,000,000 மற்றும் ரூபா 700,000,000 என ரூபா 800,000,000 மொத்தமான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த ஏற்பாட்டினை முறையே ரூபா 236,525,195 இனாலும் ரூபா 1,155,855,452 இனாலும் விஞ்சி ரூபா 2,192,380,647 தொகை காணி விற்பனையால் கிடைத்த

தொகையிலிருந்து பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி 2012 திசெம்பர் 31 அளவில் காணி விற்பனை மற்றும் அத் தொகையை முதலீடு செய்திருந்தமையால் கிடைத்திருந்த வட்டி என்பவற்றிலிருந்து 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் பயனபடுத்தப்பட்டவற்றைக் கழித்ததன் பின்னருள்ள மீதி ரூபா 20,527,173,852 ஆக காணப்பட்டது. 2012 நவம்பர் 20 ஆந் திகதிய 05/2012 ஆம் இலக்க திறைசேரிச் செயற்பாடுகள் சுற்றறிக்கைக்கு முரணாக 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 20,527,173,852 தொகையான கட்டுநிதி மீதி திறைசேரிக்கு தீர்க்கப்பட்டிருக்கவில்லை. இந்த கட்டுநிதி மீதியை 2013 ஆம் ஆண்டிற்கான கொடுப்பனவுகளிற்கு பயன்படுத்திக் கொள்வதற்கு, திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் ஆலோசனைகளிற்கு முரணாக அமைச்சின் பிரதான கணக்காளரினால் தயாரிக்கப்பட்டு திறைசேரிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மாற்றல் படிவத்திற்கு திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஒருவரினால் 2013 பெப்ரவரி 01 ஆந் திகதி அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே அமைச்சினால் அகுரேகொட இல் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற அமைச்சின் கட்டிடத்திற்காக 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டினை விஞ்சி முறையே ரூபா 336,525,195 மற்றும் ரூபா 1,855,855,452 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது.

**(ஈ) பொது வைப்புக் கணக்கு**

2 வருடத்திற்கும் மேற்பட்ட ரூபா 493,380 மொத்தமான 03 வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) வருமானக் கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சமர்ப்பிக்கப்பட்ட கணக்கின் படி ரூபா 1,166,400 வருமானம் நிலுவையாக காணப்பட்டதுடன் அந் நிலுவை வருமானம் 01 தொடக்கம் 03 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட காலப்பகுதிக்கு உரித்தானதாகும். அந் நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் இருந்தன.

(ii) 2002 யூலை 17 ஆந் திகதிய 01/2002 ஆம் இலக்க அராங்க நிதிக் கொள்கை, பொருளாதார அலுவல்கள் சுற்றறிக்கையின் 04 (ஆ) ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரினாலும் நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென்பதுடன் நிலுவை வருமானங்கள் தொடர்ந்தும் சேர்வதனை தடுப்பதற்காக உரிய கவனம் செலுத்துதலும் வேண்டும். இருப்பினும்,

மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 1,166,400 நிலுவை வருமானக் கணக்கில் காட்டப்பட்டிருந்தது.

(iii) ஒவ்வொரு ஆண்டினதும் தேறிய வருமானத்தை அமைச்சின் புத்தகங்களில் காண்பிக்கையில் ஒவ்வொரு ஆண்டிற்குமான வருமானங்களையும் அதற்கு முன்னைய ஆண்டுகளில் நிலுவையாக காணப்பட்ட வருமானத்திலிருந்து அறவிடப்பட்ட வருமானங்களையும் தனித்தனியே இனங்காணக்கூடிய விதத்தில் காண்பிக்கப்பட்டிருக்காமை காரணமாக வருடாந்த வருமானச் சேகரிப்பின் செயன்முன்னேற்றத்தை திருத்தமாக மீளாய்வு செய்வதற்கு கணக்காய்வில் முடியவில்லை.

**(ஊ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 10301 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 23,069,180 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அந் நிலுவையினை அறவிடுதல் மீதான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்பட்டன.

(ii) அமைச்சின் புத்தகங்களின் படியான அரசாங்க உத்தியோகத்தர் முற்பணக் கணக்கின் மீதி திறைசேரிப் புத்தகங்களின் படியான மீதிக்கு ஒத்திருந்தது எனக் காட்டுவதற்காக அமைச்சில் பணியாற்றாத 4 உத்தியோகத்தர்களின் பெயர்களை தனிப்பட்ட மீதிகளின் பட்டியலில் பொய்யாக உள்ளடக்கி திணைக்களத்தின் புத்தகத்தின் படி காண்பிக்கப்பட்டிருந்த மீதி ரூபா 476,168 இனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(iii) 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் உத்தியோகத்தர் ஒருவர் சேவைநிலைய இடமாற்றம் பெற்றுச் சென்ற திகதியிலிருந்து 03 மாதத்திற்குள் மாதாந்த கணக்குப் பொழிப்பினூடாக அவ் உத்தியோகத்தரின் கடன் மீதி அறவிடப்பட வேண்டிய போதிலும், 2005 முதல் 2012 ஆம் ஆண்டு சேவைநிலைய இடமாற்றம் பெற்றுச் சென்ற 24 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,766,941 மொத்தமான கடன் மீதியினை அவ்வாறு தீர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அசைவுறாத ரூபா 16,820,782 மொத்தமான 1088 நிலுவை கடன் மீதிகள் காணப்பட்டன.

(v) இடமாற்றங்கள், மரணித்தல், ஓய்வுபெறல், பதவி நீக்கம், பதவி வறிதாக்கல் மற்றும் ஏனைய காரணங்களால் அறவிடப்பட முடியாதிருந்த 5 ஆண்டுகளிற்கு மேற்பட்ட 803 உத்தியோகத்தர்களிடமிருந்து நிலுவையாகவுள்ள ரூபா 13,618,706 ஆன கடன் மீதிகளை அறவிடுவதற்கு தவறவிடப்பட்டிருந்தது.

## 1.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 1.4.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவன தலைவர்களிற்கு முகவரியிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து குறைந்தது தொடர்ந்துவரும் 03 ஆண்டுகளிற்காக கூட்டிணைந்த திட்டமொன்று அமைச்சினால் வருடத்தின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்திட்டம் 2012 திசெம்பர் 31 வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

மேற்படி 1.4.1 பந்தியில் குறிப்பிடப்பட்ட அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்திற்கமைய பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சினால் 2010 ஆம் அண்டிலிருந்து குறைந்தது தொடர்ந்துவரும் 03 ஆண்டுகளிற்கான வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் 2012 திசெம்பர் 31 வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.4.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

மேற்படி 1.4.1 பந்தியில் குறிப்பிடப்பட்ட அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட 2002 செப்தம்பர் 12 மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கைகளின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் அமைச்சினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் பிரதியொன்றுடன் பாராளுமன்றத்திற்கு

சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை 2013 நவம்பர் 30 ஆந் திகதி வரை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.4.4 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான கொள்வனவுத் திட்டம் 2012 திசெம்பர் 31 வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.5 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கோவை** | | |
| (i) நிதிப்பிரமாணம் 104(1) | 115,000 | சிலைகளை உருவாக்கும் இயந்திரத்திற்காக பயன்படுத்தப்பட்ட சீ.பீ.யூ இயந்திரம் காணாமல் போயுள்ளதாக 2012 செப்தெம்பர் மாதத்தில் கண்டறியப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பில் விசாரணை நடாத்துவதற்காக விசாரணைச் சபையொன்றை நியமித்தல் 2013 சனவரி மாதம் வரை தாமதிக்கப்பட்டிருந்தது.<br><br>நட்டமொன்றோ அல்லது சேதமொன்றோ இடம்பெற்றவுடன் அதன் அளவினையும் காரணங்களையும் உறுதியாக அறிந்து கொள்வதற்காகவும் அதற்குப் பொறுப்பான தரப்பினரை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவும் விசாரணை தொடங்கப்பட வேண்டிய போதிலும், |

| | | |
|---|---|---|
| | | அமைச்சுக்குச் சொந்தமான 2 வாகனங்கள் விபத்துக்குள்ளாகி 7 மாதங்கள் கடந்த பின்னர் விசாரணை சபை நியமிக்கப்பட்டு குறித்த அறிக்கை வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப் பட்டது. |
| (ii) நிதிப்பிரமாணம் 218(2) | 843,924 | ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பங்கள் தவிர்ந்த ஏனைய எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நிதியாண்டின் போதான உரித்துக்கோரல்கள் அந்த ஆண்டிலேயே செலுத்தி தீர்க்கப்பட வேண்டிய போதிலும், அமைச்சினால் நிலுவை மின்சார பட்டியல்களைச் செலுத்துகையில் இலங்கை மின்சார சபைக்கு ரூபா 843,924 வட்டியொன்று மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது. |
| (iii) நிதிப்பிரமாணம் 756, 757 மற்றும் 1647(ஆ) | - | 2012 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்னைய ஆண்டுகளிலும் அமைச்சின் வாகனங்கள் தொடர்பில் வருடாந்த மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 1.6 கணக்காய்விற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமை

பாதுகாப்புச் சேவைகள் கல்லூரிக்கு தளபாடங்களை தயாரிப்பதற்காக பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சினால் 2011 ஆம் ஆண்டில் ரூபா 3,291,209 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட மரங்கள் 6 ஆவது பொறியியல் சேவைகள் படைப்பிரிவுக்கு வழங்கப்பட்டிருந்தன. இப் படைப்பிரிவினால் தயாரிக்கப்பட்ட தளபாடங்கள் தொடர்பான விபரங்கள் மற்றும் அத் தளபாடங்களை கல்லூரிக்கு வழங்கியமைக்கான தகவல்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக கொள்வனவு செய்யப்பட்ட மரங்கள் குறித்த பணிக்காக பயன்படுத்தப்பட்டிருந்தமையை உறுதிப்படுத்தவதற்கு முடியாதிருந்தது.

## 1.7 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

### கொள்வனவு வழிகாட்டல்கள் நடைமுறையிலிருந்து விலகுதல்.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் பிரதான அலுவலகம் மற்றும் முப்படைகளின் தலைமையகத்தினை நிர்மாணித்தல் செயற்திட்டத்தின் கொள்வனவுகள் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையிலுள்ள வழிகாட்டல்களிற்கு முரணாக கொள்வனவுச் சபையினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுச் சபையினதும் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் செயற்திட்டத்தினால் 03

சந்தர்ப்பங்களில் ரூபா 44,371,865 பெறுமதியான பொருட்களும் சேவைகளும் வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) விலை ஒப்பீட்டு முறையின் கீழ் 09 சந்தர்ப்பங்களில் ரூபா 22,608,182 பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அரசாங்க கொள்வனவுகள் வழிகாட்டல்கள் கோவையின் 6.2.2 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் வழங்குனருக்கு விலை மனுக்களைச் சமர்ப்பிப்பதற்காக குறைந்த பட்சம் 07 நாட்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு 03 முதல் 06 நாட்கள் வரையான வீச்சிலேயே காலம் வழங்கப்பட்டிருந்தது. இதன் படி வழங்குனருக்கு விலை மனுக்களைத் தயரிப்பதற்காக நியாயமான காலமொன்று வழங்கப்பட்டிருக்காமையால் போட்டி விலைகளைப் பெற்றுக்கொள்வதற்கிருந்த வாய்ப்பு வரையறுக்கப்பட்டிருந்தது.

(இ) தேசிய போட்டி விலை மனுக்கள் கோரல் முறையின் கீழ் செய்திப்பத்திரிகை அறிவித்தலை பிரசுரித்து கூறுவலைகளைப் பெற்று 05 சந்தர்ப்பங்களில் ரூபா 195,207,320 பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதற்காக 09 முதல் 11 நாட்கள் வரையான குறைந்த காலம் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. அரசாங்க கொள்வனவுகள் வழிகாட்டல்கள் கோவையின் 6.2.2 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் விலை மனுக்களைச் சமர்ப்பிப்பதற்காக குறைந்தபட்சம் 21 நாட்கள் வழங்குனருக்கு வழங்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தேசிய போட்டி விலை மனுக்கள் கோரல் முறையின் கீழ் 05 சந்தர்ப்பங்களில் பொருட்கள், சேவைகளை வழங்குவதற்காக கூறுவிலைகள் ஆவணங்களை பெற்றுக்கொள்வதற்கு அரசாங்க கொள்வனவுகள் வழிகாட்டல்கள் கோவையின் 6.1.1 (அ) ஆம் வழிகாட்டலின் பிரகாரம் விலை மனுக்கோரலுக்கு முன்னைய தினம் வரை விலை மனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு விலைமனுதாரர்களிற்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டிய போதிலும், அதற்காக 04 நாட்கள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது.

## 1.8 மோசடித் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் புதுப்பித்தல் நடவடிக்கைகளிற்காக 2011 ஏப்ரல் 08 ஆந் திகதி ஒன்று ரூபா 14,800 வீதம் 68 ‘‘டோ ஹெடல்கள்’’ ரூபா 1,006,400 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அப்பொருட்களை குறித்த தேவைக்காக பயன்படுத்தாது விளைவற்றதாக அமைச்சின் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தமை தொடர்பாக வழங்கப்பட்ட கணக்காய்வு ஐய வினாவின் பின்னர் அந்த டோ ஹெடல் இருப்பு 2012 யூன் 18 ஆந் திகதி அன்பளிப்பாக பாதுகாப்புச் சேவைகள் கல்லூரியின் நிர்மாண நடவடிக்கைகளிற்காக வழங்கப்பட்டிருந்தது. 2013 சனவரி 18 ஆந் திகதி பாதுகாப்புச் சேவைகள் கல்லூரியில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையில் அன்பளிப்பாக வழங்கப்பட்டிருந்த மேற்படி டோ ஹெடல் இருப்பு எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாது 6 ஆவது பொறியியல் சேவைகள் படைப்பிரிவின் களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. அந்த டோ ஹெடல்களை எந்தவொரு கதவுக்கும் பொருத்த முடியாது என்பது பௌதீக பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது. அவ்வகை டோ ஹெடல்களை 2013 பெப்ரவரி 06 ஆந் திகதியளவில் சந்தையில் நிலவிய விலையின் படி ஒன்று ரூபா 2,500 வீதம் 10 சதவீத வட்டத்துடன் கொள்வனவு செய்யமுடியும் என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.
அதன்படி, டோ ஹெடல்களை கொள்வனவு செய்கையில் டோ ஹெடல் ஒன்றுக்கு ரூபா 12,550 வீதம் 68 டோ ஹெடல்களிற்காக ஏறத்தாழ ரூபா 853,400 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தமையும் அமைச்சு செலவிட்டிருந்த ரூபா 1,006,400 ஆன மொத்தத்

தொகையும் திரட்டிய நிதியத்திற்கு செய்யப்பட்ட நட்டமென்பதால் அந்த நட்டத்தினை அதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.9 நட்டங்களும் சேதங்களும்

சாதாரண சந்தை விலை ஏறத்தாழ ரூபா 2,200,000 தொகையான கெப் வாகனமொன்று அண்ணளவாக ரூபா 800,000 குறைந்த தொகைக்கு காப்புறுதி செய்யப்பட்டிருந்தமையால் 2011 ஆகஸ்ட் 16 ஆந் திகதி இந்த வாகனத்திற்கு ஏற்பட்ட விபத்தின் பின்னர் திருத்துவதற்காக ஏற்பட்டிருந்த ரூபா 192,280 தொகையில் காப்புறுதி நிறுவனத்தினால் இழப்பீடாக ரூபா 65,396 செலுத்தப்பட்டிருந்தது. எஞ்சிய தொகையில் 10 சதவீதத்தை சாரதியிடமிருந்து அறவிட்டு ரூபா 114,195 நட்டத்தை பதிவழிப்பதற்கு விசாரணைச் சபை பரிந்துரைத்திருந்தது. அதன்படி நியாயமான சந்தை விலைக்கு வாகனத்தை காப்புறுதி செய்யாதிருந்தமை காரணமாக முழுமையான நட்டத்தினையும் காப்புறுதி இழப்பீடாக பெற்றுக்கொள்வதற்கிருந்த சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது.

### 1.10 முகாமைத்துவ பலவீனங்கள்

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பாதுகாப்புச் சேவைகள் கல்லூரியின் பயன்பாட்டிற்காக 2011 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 5,832,984 கிரயம் கொண்ட தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் ஏறத்தாழ 02 ஆண்டு காலமாக பயன்படுத்தப்படாது களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டன. அந்த தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களில் ரூபா 1,369,515 ஆன இருப்பு களஞ்சியத்திற்கு கிடைத்திருந்த திகதி முதல் 2013 சனவரி 15 ஆந் திகதி வரை கல்லூரியின் எந்தவொரு செயற்பாட்டிற்காகவும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அமைச்சினால் ரூபா 189,000 தொகையான 03 ''ஹை ஸ்டோரேஸ்'' சிற்றலுமாரிகள் 2012 யூன் 01 ஆந் திகதி பாதுகாப்புச் சேவைகள் கல்லூரியின் களஞ்சியத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தன. அந்த 03 சிற்றலுமாரிகளினதும் திறப்புத் தகடுகள் கழற்றி அகற்றப்பட்டுள்ளமை 2013 சனவரி 15 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையில் அவதானிக்கப்பட்டதுடன் அது தொடர்பில் நடவடிக்கைகளும் அமைச்சினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பாதுகாப்புச் சேவைகள் கல்லூரியின் மூன்றாவது வளவிற்காக திறப்புக்களைக் கொண்ட 04 இலாச்சுக்களை உள்ளடக்கிய 120 உருக்கு அலுமாரிகள் ஒன்று ரூபா 25,200 வீதம் ரூபா 3,024,000 செலவில் கொள்வனவு செய்வதற்காக தெரிவுசெய்யப்பட்டிருந்த நிறுவனத்திற்கு கட்டளை கையளிக்கப்பட்டிருந்தது. அத் தேவைப்பாடுகளிற்கு முரணாக அந்த நிறுவனத்தினால் 4 இலாச்சுக்களைக் கொண்ட 03 உருக்கு அலுமாரிகள் ஒன்றுடனொன்று இணைத்துத் தயாரிக்கப்பட்டிருந்த 40 உருக்கு அலுமாரிகள் வழங்கப்பட்டிருந்தன. அதற்கமைய அப் பொருட்களை ஏற்பதற்கு மறுக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் அப்பொருட்கள் கையேற்கப்பட்டு கட்டளையில் குறிப்பிடப்பட்டிருந்த தொகை செலுத்தப்பட்டிருந்தது. அப்பொருட்களை கையேற்பதற்கும் பணத்தைச் செலுத்துவதற்கும் செயற்பட்டிருந்த உத்தியோகத்தர்களிற்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் நகர அபிவிருத்தி பிரிவினால் பேணப்பட்டிருந்த அநேக பொருட் பதிவேடுகள் உரிய ஏற்பாடுகளிலிருந்து விலகி அழிக்கும் மையால் மாற்றப்பட்டிருந்ததுடன் சில பதிவேட்டுப் பொருட்களின் பெறுவனவைக் காட்டிலும் விநியோகம் அதிகளவில் இருந்தமையைக் காண முடிந்தது. அழிக்கப்பட்டிருந்த 57 பொருள் விடயங்களும் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டிருந்த 64 பொருள் விடயங்களும் பொருட் பதிவேட்டிலிருந்து நீக்கப்பட்டு பொருட்பதிவேடு நாளதுவரையாக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் 2012 ஆம் ஆண்டிற்கான நிதி அதிகாரங்களை ஒப்படைத்தலின் கீழ் தேசிய மாணவர் படையணியின் பணிப்பாளருக்கு கொடுப்பனவை அங்கீகரிப்பதற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 75,000 எல்லை மீறலை தவிர்ப்பதற்காக ஒத்த பொருள் வகைகள் கிட்டிய திகதிகளில் பகுதி பகுதியாக கொள்வனவு செய்யப்பட்டு ஒருசில பட்டியல்களினூடாக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ரூபா 1,090,742 மொத்தப் பெறுமதியுடைய உறங்கல் பைகள், டயர்கள் மற்றும் டியூப்கள், நீர்த்தொட்டிகள், பீங்கான் கற்கள் போன்றன கொள்வனவு செய்யப்பட்டிருந்த அவ்வாறான 04 சந்தர்ப்பங்கள் கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டன. இவ்வாறு ஒரே வகையான பொருட்கள் பகுதிபகுதியாக கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த வியாபாரக் கழிவு இழக்கப்பட்டிருந்ததுடன் ஒரே பொருளை கொள்வனவு செய்வதற்காக அடிக்கடி விலை மனுக்கள் கோரப்பட்டிருந்தமையால் குறித்த ஆவணமாக்கல் நடவடிக்கைளிற்காக தேவையற்ற செலவினத்தை செய்யவேண்டியும் ஏற்பட்டிருந்தது. .

(ஊ) பொதுப் பாதுகாப்பு மற்றும் முப்படைகளின் தலைமையகத்தை நிர்மாணித்தல் செயற்திட்டத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த 2 மின்சார விநியோகங்களிற்காக 2012 பெப்ரவரி முதல் ஏப்ரல் வரையான காலத்திற்குரிய 4 பட்டியல்களை உரிய தினத்தில் செலுத்தாமை காரணமாக ரூபா 21,290 வட்டியாக இலங்கை மின்சார சபைக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(எ) அமைச்சின் ஊழியப் புரள்வை பரீட்சித்ததில் அமைச்சிற்கு நியமனங்களை பெற்றும் இடமாற்றங்களை பெற்றும் வருகை தந்திருந்த அதிகளவு எண்ணிக்கையிலான பதவியணியினர் நீண்டகாலமாக அமைச்சில் இருக்கின்றமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. அரசாங்க அமைச்சுக்களிலும் திணைக்களங்களிலும் 05 ஆண்டு சேவைக்காலத்தை பூர்த்திசெய்யும் ஊழியர்களை அமைச்சுக்களிற்கிடையே இடமாற்றம் செய்யும் நடைமுறை பொது நிர்வாகத்தில் செயற்படுத்தப்படுகின்ற போதிலும், 30, 20, 10 மற்றும் 07 ஆண்டுகளிற்கு மேற்பட்ட சேவைக்காலத்தைக் கொண்ட அரசாங்க ஊழியர்கள் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சில் தொடர்ச்சியாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

## 2. தலைப்பு 222 – இலங்கை தரைப்படை

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

இலங்கை தரைப்படையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்க கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 செப்தெம்பர் 05 ஆந் திகதி இராணுவ தளபதிக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குகிடைக்கப் பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 2.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் இலங்கை தரைப்படையின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (இ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 2.4 இலிருந்து 2.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) கட்டுநிதிக் கணக்கு**

2012 ஏப்ரல் 30 ஆந் திகதியளவில் இலங்கை தரைப்படையால் தீர்க்கப்படாதிருந்த கட்டுநிதி மீதிகளின் மொத்தம் ரூபா 6,527,029,579 ஆக இருந்தது.

**(ஆ) பொது வைப்புக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) உடைந்த உலோகப் பொருட்களின் விற்பனையிலிருந்து கிடைத்திருந்த ரூபா 40,404,136 தொகையினை அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காது பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

(ii) பல்கலைக்கழக மாணவர்களின் தலைமைத்துவ பயிற்சிக்காக உயர் கல்வி அமைச்சிலிருந்து கிடைத்திருந்த தொகையிலிருந்து எஞ்சியிருந்த ரூபா 33,625,870 அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்காது பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

22201 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 379,418,157 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அந் நிலுவையினை அறவிடுவதற்கான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்பட்டன.

**2.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**2.4.1 கூட்டிணைந்த திட்டம்**

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவன தலைவர்களிற்கு முகவரியிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து குறைந்தது தொடர்ந்துவரும் 03 ஆண்டுகளிற்காக கூட்டிணைந்த திட்டமொன்று இலங்கை தரைப்படையால் வருடத்தின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்திட்டமானது 2012 திசெம்பர் 31 வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்

ரூபா 70,004,202 மொத்தமான பெறுமதி கொண்ட 44 வாகனங்கள் விளைவற்றுக் காணப்படுகின்றமை கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டன.

### (ஆ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

இலங்கை தரைப்படையால் 2012 திசெம்பர் 31 இல் தீர்க்கப்படாது காணப்படும் பொறுப்புக்கள் ரூபா 17,753,718,642 ஆக காணப்பட்டதுடன் அது தொடர்பில் காலப்பகுப்பாய்வொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அம் மீதிகளை தீர்த்தல் நிலைமை திருப்தியற்றதாகக் காணப்பட்டது.

## 2.6 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| **(அ) நியதிச்சட்ட ஏற்பாடுகள்** | | |
| 1981 இன் 26 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதி அதிகாரச்சட்டம் | 816,365 | ஊழியர்களிடமிருந்து அறவிடப்படுகின்ற ஊழியர் சேமலாப நிதிப் பங்களிப்புகளை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்காது பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது. |
| **(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கோவை** | | |
| (i) நிதிப்பிரமாணம் 94 | 17,745,375,888 | 42 செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்திய பின்னரான சேமிப்புகளை |

| | | | |
|---|---|---|---|
| | | | மிகைத்து பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தன. |
| (ii) | நிதிப்பிரமாணம் 115 | 2,795031 | நிதியாண்டினுள் சமர்ப்பிக்கப்படுகின்ற உரித்துக்கள் அவ்வாண்டிலேயே தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 1994 மற்றும் 1999 ஆம் ஆண்டுகளிற்குரிய கொள்வனவுகள் 2012 ஆம் ஆண்டில் தீர்க்கப்பட்டிருந்த போதிலும், அதற்கான அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 137(5) | 1,914,595 | வழங்கப்பட்டிருந்த பொருட்களை பரிசோதித்து சரியான முறையில் பொறுப்பேற்றமையை உறுதிப்படுத்தாது அவற்றிற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (iv) | நிதிப்பிரமாணம் 429 | - | நிதியாண்டின் இறுதியில் கணக்குகளை தீர்ப்பனவு செய்து அம் மீதிகள் திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்திற்கு தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 02 வங்கிக் கணக்குகளிற்குரிய இலங்கை ரூபா 6,361,050,637 மீதித் தொகையும் ஐக்கிய அமெரிக்க டொலர் 14,144,107 மீதித் தொகையும் அவ்வாறு தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| **(இ)** | தேசிய பாதீட்டுச் சுற்றிக்கை | | |
| | 2012 பெப்ரவரி 16 ஆந் திகதிய 156 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 6 ஆம் பந்தி | 432,578 | அரசாங்க நிதிகளிலிருந்து உபசாரச் செலவினங்களை செய்கையில் அச் செலவினங்கள் நேரடியாக திணைக்களத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கானவையாக இருக்க வேண்டுமாயினும், உத்தியோகத்தர்களினதும் பொழுதுபோக்கு செயற்பாடுகளிற்காகவும் அச் செலவினங்கள் செய்யப்பட்டிருந்தன. |

## 2.7 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்

தரைப்படையால் செய்யப்பட்டிருந்த சில கொடுக்கல்வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையானவையாகும். தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல்வாங்கல்களின் விபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

(அ) பாதுகாப்புச் சேவைகள் தலைமையகத்தின் (கிழக்கு) நூலகத்திற்காக படைப்பிரிவு தாபன தலைவர் கணக்கிலிருந்து புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டதாக குறிப்பிட்டு போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து ரூபா 915,095 தொகை 2012 பெப்ரவரி 03 ஆந் திகதி அரசாங்க நிதியிலிருந்து மீள் நிரப்பல் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மின்னேரிய பீரங்கி பயிற்சி பாடசாலையினால் புத்தகங்களை கொளவனவு செய்வதற்காக 2011 திசெம்பர் 28 ஆந் திகதி தனியார் நிறுவனமொன்றிற்கு ரூபா 999,500 செலுத்தப்பட்டிருந்த போதிலும், அத்திகதி வரை எவ்விதப் புத்தகங்களும் நூலகத்திற்கு கிடைத்திருக்கவில்லை.

(இ) மோதர ரொக்ஹவுஸ் பாசறையில் ஐந்து மாடிக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட பூர்த்தியாக்கப்பட்ட கொங்ரீட்களுக்கு ஏனைய தனியார் நிறுவனமொன்றின் காசோலையினால் ரூபா 2,278,972 செலுத்தப்பட்டிருந்தது.

## 2.8 முறையற்ற கொடுக்கல்வாங்கல்

தரைப்படையால் செய்யப்பட்டிருந்த சில கொடுக்கல்வாங்கல்கள் முறையற்றவையாகும். அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

### (அ) அதிகாரமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பாதுகாப்புச் சேவைகள் தலைமையகத்தின் (கிழக்கு) நூலகத்திற்கு புத்தகங்களை கொள்வனவு செய்கையில் கொள்வனவுச் சபையால் தெரிவுசெய்யப்பட்டிருந்த நிறுவனங்களிலிருந்து கொள்வனவு செய்யாது 2012 பெப்ரவரி 16 ஆந் திகதி வேறொரு நிறுவனத்திடமிருந்து ரூபா 559,933 பெறுமதியான புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

### (ஆ) நட்டங்களும் சேதங்களும்

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்பட்ட இழப்புக்களும் சேதங்களும் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) மொரட்டுவ மாநகர சபைக்கு செலுத்த வேண்டிய இறைவரி தாமதிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 474,845 ஆணைப்பத்திர கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது.

(ii) 10 ஆண்டுகளிற்கும் மேல் பழமைவாய்ந்த 104 நிகழ்வுகளிற்குரிய ரூபா 1,187.9 மில்லியன் நட்டங்களும் சேதங்களும் சம்பந்தமாக ஆய்ந்தறிந்து உரிய நபர்களிடமிருந்து அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பாதுகாப்புச் சேவைகள் தலைமையகத்தின் (கிழக்கு) நூலகத்திற்கு புத்தகங்களை கொள்வனவு செய்கையில் உரிய கொள்வனவு வழிகாட்டல்களை பின்பற்றாமை காரணமாக பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த 12 சதவீத மற்றும் 10 சதவீத கழிவுகள் இழக்கப்பட்டிருந்தன.

## 3. தலைப்பு 223 – இலங்கை கடற்படை

### 3.1 கணக்காய்வின் நோக்கெல்லை

இலங்கை கடற்படையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 ஒக்தோபர் 31 ஆந் திகதி கடற்படைத் தளபதிக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 3.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 3.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் இலங்கை கடற்படையின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (ஈ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 3.4 இலிருந்து 3.12 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்**

இலங்கை கடற்படையால் 2013 மார்ச் 31 ஆந் திகதியளவில் பின்வரும் கணக்குகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடய இல. | கணக்கின் பெயர் | சமர்ப்பிக்கப்பட்ட திகதி | தாமதித்த காலம் |
|---|---|---|---|
| | | | நாட்கள் |
| 22301 | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று | 2013 ஏப்ரல் 29 | 29 |
| 22302 | களஞ்சிய முற்பணக் கணக்கு | 2013 ஏப்ரல் 29 | 29 |

**(அ) கட்டுநிதிக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 ஏப்ரல் 30 ஆந் திகதியளவில் இலங்கை கடற் படையால் தீர்க்கப்படாதிருந்த கட்டுநிதி மீதிகளின் மொத்தம் ரூபா 646,711,593 ஆக இருந்தது. அதில் ரூபா 618,207,963 ஆன மீதி 2010 ஆம் ஆண்டிலிருந்து நிலவி வருகின்றது.

(ii) நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் கருமம் முடிவுற்றவுடன் பெற்றுக்கொள்ளப்பட்ட குறித்த நோக்க உப கட்டுநிதிகள் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், கருமம் முடிவுற்று 03 மாதங்கள் முதல் 09 மாதங்கள் வரையான கால தாமதத்தின் பின்னர் 08 சந்தர்ப்பங்களில் ரூபா 540,000 தொகையான உப கட்டுநிதிகள் தீர்க்கப்பட்டிருந்தன.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

22301 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 14,635,704 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அந் நிலுவையினை அறவிடுவதற்கான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்பட்டன.

### 3.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### 3.4.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவன தலைவர்களிற்கு முகவரியிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து குறைந்தது தொடர்ந்துவரும் 03 ஆண்டுகளிற்காக கூட்டிணைந்த திட்டமொன்று இலங்கை கடற் படையால் வருடத்தின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்திட்டம் 2012 திசெம்பர் 31 வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

மேற்படி 3.4.1 பந்தியில் குறிப்பிடப்பட்ட அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்திற்கமைய இலங்கை கடற்படையால் 2010 ஆம் அண்டிலிருந்து தொடர்ந்துவரும் ஆண்டுகளிற்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் 2012 திசெம்பர் 31 வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.4.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

மேற்படி 3.4.1 பந்தியில் குறிப்பிடப்பட்ட அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட 2002 செப்தம்பர் 12 மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கைகளின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் இலங்கை கடற்படையால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியொன்றுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை 2013 யூலை 31 ஆந் திகதி வரை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.4.4 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2012 திசெம்பர் 31 வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.4.5 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை செயற்படுத்தல்

2009 ஜுன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/09/01 ஆம் இலக்க முகாமைத்தவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை தாபித்து காலாண்டுக்கு ஒன்று என்ற வீதத்தில் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும், 2012

ஆம் ஆண்டில் இரண்டு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

**பெறவேண்டிய மீதி**

வெளித் தரப்பினரிடமிருந்து 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டியிருந்த 01 ஆண்டிற்கு மேற்பட்ட 05 ஆண்டுகளிற்கு குறைவான மீதிகளின் பெறுமதி ரூபா 9,813,686 ஆக காணப்பட்டதுடன் அந்த மீதிகளை அறவிடுவதில் பலவீனமான நிலை காணப்பட்டது. அத்துடன் கட்டளையிடப்பட்ட எல்லாப் பொருட்களையும்/பண்டங்களையும் வழங்கி பூரணப்படுத்துவதற்கு முன்னர் முந்திய செலுத்துகை தீப்பனவின் மூலம் வழங்குனர்களிற்கு பணம் செலுத்தப்பட்டிருந்தமை காரணமாக மேலதிகமாகச் செலுத்தப்பட்ட தொகையினை அறவீடு செய்வதற்காக வழக்குத் தொடர வேண்டிய நிலை இலங்கை கடற்படைக்கு ஏற்பட்டிருந்தது.

### 3.6 இணக்கமின்மைகள்

**(அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வுசெய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கோவை** | | |
| (i) நிதிப் பிரமாணம் 210(1) | 420,535 | கழிவொன்றைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த எல்லா சந்தர்ப்பங்களிலும் அக் கழிவினை பெற்றுக்கொள்ளக் கூடிய விதத்தில் நீர்ப் பட்டியல்கள் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 257 | 3,394,185 | 08 சந்தர்ப்பங்களில் எவ்விதப் பண்டங்களும் வழங்கப்படுவதற்கு முன்னர் வழங்குனருக்கு பணம் செலுத்தப்பட்டிருந்தது. |

**3.7 கணக்காய்விற்கான சான்றின்மை**

2011 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 17,585,308 மொத்தமான 08 கொடுப்பனவு உறுதிச்சிட்டைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.8 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்**

நாட்டுக்கு மகுடம் கண்காட்சியின் நிர்மாணத்திற்குத் தேவையான பொருட்களை கொள்வனவு செய்வதற்காக நிதிப்பிரமாணம் 137(5) இற்கு முரணாக ரூபா 1,980,000 தொகை வழங்குனருக்குச் செலுத்தப்பட்டிருந்ததுடன் பொருட்களை வழங்காது 6 நாட்களின் பின்னர் வழங்குனர் அத் தொகையை இலங்கை கடற்படைக்கு திருப்பிச் செலுத்தியிருந்தார். அதன்படி அரசாங்க பணத்தினை துஷ்பிரயோகம் செய்வதற்கு இலங்கை கடற்படை வழங்குனருக்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்திருந்தது.

**3.9 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

இலங்கை கடற்படையால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல்வாங்கல்கள் முறையற்றவையாகும். அவதானிக்கப்பட்ட அவ்வாறான சந்தர்ப்பங்களில் சில கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் நடைமுறையிலிருந்து விலகுதல்

(i) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் 4.2.2 ஆம் வழிகாட்டலின் படி கொள்வனவு கால அட்டவணையொன்றின்றி பொருட்களை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் பொருட்களின் பண்புகளை திருத்தமாக இனங்காணாமை காரணமாக வெலிசறை கடற்படை வைத்தியசாலைக்கு ‘‘மறைப்பு திரைச்சீலை’’ (Privacy Curtain) 1316 மீற்றர்களை மீற்றரொன்று ரூபா 10,500 வீதம் ரூபா 13,818,000 விலையில் கொள்வனவு செய்வதற்குக் காணப்பட்ட சந்தர்ப்பம் இழக்கப்பட்டு மீற்றரொன்று ரூபா 12,500 வீதம் ரூபா 16,450,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 2,632,000 நட்டம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்தது.

(ii) இலங்கை கடற் படைக்கு 350 மட்பாண்ட பீங்காண்களை கொள்வனவு செய்கையில் தொழில்நுட்ப மதிப்பீட்டுச் சபையின் பரிந்துரையின் பிரகாரம் குறைந்த கூறு விலையினைச் சமர்ப்பத்திருந்த வழங்குனரிடமிருந்து கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காது கொள்வனவுச் சபையின் அங்கீகாரத்தின் படி அதற்குக் கூடிய விலையினை சமர்ப்பித்திருந்த

வழங்குனரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையால் அரசாங்கத்திற்கு ரூபா 57,750 நட்டம் ஏற்பட்டிருந்தது.

(iii) கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் 5.3.11 (ஆ) iii ஆம் வழிகாட்டலின் படி செல்லுபடியாகும் காலத்தினுள் ஒப்பந்தம் கையளிக்கப்படுமாயின் விலை மனுதாரரால் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் என்பதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக பிணைமுறி பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், ரூபா 9,271,475 பெறுமதியான காற்றுச் சீராக்கி இயந்திரத்தைக் கொள்வனவு செய்கையில் விலைமனு முறியினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் 7.12.2 ஆம் வழிகாட்டலின் படி கூறுவிலைகளைச் சமர்ப்பித்திருந்த தனியொரு வழங்குனரிடமிருந்து பொருட்களை கொள்வனவு செய்வதற்குத் தீர்மானிக்கையில் அப் பொருளின் சந்தை விலையினை பரிசோதித்து சமர்ப்பிக்கப்பட்டுள்ள கூறுவிலை கூடுதலாகக் காணப்படின் விலையினைக் குறைத்துக் கொள்வதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் குறித்த வழங்குனருடன் கலந்துரையாட வேண்டிய போதிலும், ரூபா 88,590 பெறுமதிகான DVD டுப்லிகேடரைக் கொள்வனவு செய்கையில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கையேட்டின் 7.11 ஆம் வழிகாட்டலின் படி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் தயாரிக்கப்பட வேண்டிய கூறு விலைகள் மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்படாது ரூபா 635,459 இற்கு பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) அதிகாரமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட அதிகாரமற்ற கொடுக்கல்வாங்கல்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

(i) 2011 யூலை 11 ஆந் திகதி முதல் 2012 யூன் 30 ஆந் திகதி வரையான காலத்தில் கலங்கரை விளக்க சிற்றுண்டிச் சாலைகளை நடாத்திச்செல்வதன் மூலம் ஈட்டப்பட்டிருந்த ரூபா 73,397,600 வருமானம் திரட்டிய நிதியத்திற்கு செலவு வைக்கப்படாதிருந்ததுடன் அந்த வருமானத்தை ஈட்டுவதற்கான

செலவினமாக ரூபா 67,663,065 தொகை திரட்டிய நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ii) 2009 பெப்ரவரி 03 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரமும் அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தினதும் தாபன பணிப்பாளர் நாயகத்தினதும் பணிப்புரைகளின் படியும் வெளித்தரப்பினர்களிற்கு வழங்கப்பட்ட சேவைகளிற்காக உழைக்கப்படுகின்ற சகல வருமானங்களும் திரட்டிய நிதியத்திற்குச் செலவு வைக்கப்படுதல் வேண்டுமென அறிவுறுத்தப்பட்டிருந்த போதிலும், இலங்கை கடற்படை அதற்கமைய நடவடிக்கை எடுக்காது சகல வருமானங்களையும் நலன்புரி நிதியத்திற்குச் செலவுவைத்து அதிகாரமின்றி செலவிட்டிருந்தது.

(iii) கொள்வனவு ஆலோசனைகள் படிவங்களின் படி ரூபா 2 மில்லியனுக்கு மேற்பட்ட வழங்கல்களை பெற்றுக்கொள்கையில் வழங்குனருடன் முறைப்படியான உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட வேண்டிய போதிலும், ரூபா 2.6 மில்லியன் மற்றும் ரூபா 6.3 மில்லியன் பெறுமதியான காற்றுச்சீராக்கல் இயந்திரங்களைக் கொள்வனவு செய்கையில் முறைப்படியான உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டிருக்கவில்லை.

## 3.10 நட்டங்களும் சேதங்களும்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் வெளிப்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான அவதானிப்புகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

(அ) இலங்கை கடற் படைக்கு 5000 ரவைக் கொள்கலன்களை கொள்வனவு செய்வதற்காக தெரிவுசெய்யப்பட்ட வழங்குனர்களின் விலைகளின் செல்லுபடியாகும் காலத்தினுள் கட்டளையினை இடுவதற்கு தவறியமை காரணமாக மீண்டும் கூறுவிலைகள் கோரப்பட்டு அப் பொருட்களை கொள்வனவு செய்யவேண்டி ஏற்பட்டிருந்தது. அவ்வாறு மீண்டும் விலைகோரல்களை மேற்கொள்கையில் செல்லுபடியாகும் காலத்தில் நிலவிய விலைகளைக் காட்டிலும் கூடிய விலையினை செலுத்தவேண்டியேற்பட்டிருந்தமை காரணமாக திரட்டிய நிதியத்திலிருந்து ரூபா 3,550,000 தொகை மேலதிமாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை கடற்படையின் சிரேஷ்டத்துவ ஆவணத்தின் 750 பிரதிகளை அச்சிடுகையில் பிரதியொன்று ரூபா 390 வீதம் அச்சிடுவதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுச் சபை பரிந்துரைத்திருக்கையில் அதற்கு முரணாக மீண்டும் விலைமனுக்களைக் கோரி விலைமனுவைச் சமர்ப்பித்திருந்த அதே நிறுவனத்திடமிருந்து பிரதியொன்று ரூபா 475 வீதம் அச்சிடப்பட்டிருந்தமை காரணமாக ரூபா 63,750 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(இ) வாடகை அடிப்படையில் வாகனங்களைப் பெற்றுக்கொள்கையில் குறைந்த விலை மனுவைச் சமர்ப்பித்திருந்த நிறுவனத்திடமிருந்து நாளொன்றிற்கு ரூபா 7,800 வீதம் முழுமையான தேவைப்பாட்டிற்குமாக 33 வாகனங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளாது 8 வாகனங்கள் நாளொன்றிற்கு ரூபா 12,500 வீதம் அடுத்தபடியாக குறைந்த விலை மனுவைச் சமர்ப்பித்திருந்த நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. அதன் காரணமாக ரூபா 164,500 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) இலங்கை கடற்படைக்கு தேவையான 41 மெற்றிக் தொன் எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 6,328,852 தொகை வெளிநாட்டு எண்ணைக் கம்பனியொன்றுக்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அக் கம்பனியினால் வழங்கப்பட்டிருந்த உள்ளபடியான எண்ணையின் அளவு 39.771 மெற்றிக்தொன்களாக காணப்பட்டது. ஆகையால் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 189,712 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) இலங்கை கடற்படைக்கு கப்பல் கம்பனியொன்றிடமிருந்து 27.31 மெற்றிக் தொன் டீசலினைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 3,722,504 தொகைக் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அக் கம்பனியினால் வழங்கப்பட்டிருந்த அளவு 26.843 மெற்றிக்தொன்களாக காணப்பட்டது. ஆகையால் ரூபா 63,655 தொகை வழங்குனருக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்த தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை காரணமாக திரட்டிய நிதியத்திற்கு ரூபா 63,582 நட்டம் ஏற்பட்டிருந்தது.

## 3.11 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்பட்ட சிக்கனமற்ற விதத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்த கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) மின்சார பட்டியல்களிற்கு உரிய திகதிகளில் பணம் செலுத்தப்படாமை காரணமாக இலங்கை மின்சார சபைக்கு மீளாய்வாண்டில் ரூபா 3,486,592 வட்டியாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் நாட்டுக்கு மகுடம் கண்காட்சிக்காக 250 அலகுகள் ‘‘ஸ்கேபோல்டிங்’’ (Scaffolding) தேவைப்பாட்டினை பூர்த்திசெய்து கொள்வதற்காக 1000 அலகுகளைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 2,792,975 செலுத்தப்பட்டிருந்தது. அதன்படி, தேவைக்குமதிகமாக 750 அலகுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை காரணமாக ரூபா 2,094,731 பயனற்ற செலவினம் செய்யப்பட்டிருந்தது.

**3.12 முகாமைத்துவ பலவீனங்கள்**

பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்களிற்கு முரணாக பொருட்கள் கிடைப்பதற்கு முன்னர் மீளாய்வாண்டில் வழங்குனருக்கு ரூபா 367,486,911 செலுத்தப்பட்டிருந்தது. இவ்வாறான கொடுப்பனவுகளை இனிமேலும் செய்யக்கூடாதென 2011 யூன் 9 ஆந் திகதி இடம்பெற்ற அரசாங்க கணக்குகள் குழுக் கூட்டத்தில் பணிப்புரை வழங்கப்பட்டிருந்த போதிலும், 2013 நவம்பர் 30 ஆந் திகதியளவில் கூட இலங்கை கடற்படை அந்த நடைமுறையிலிருந்து விலகிச் செயற்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் ஏற்பாடுகளைப் பயன்படுத்தி வழங்குனரின் பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 3,792,206 பெறுமதி கொண்ட 7 முற்செலுத்துகை தீர்வுப் படிவங்கள் (காசோலைகள்) 2013 பெப்ரவரி 14 ஆந் திகதியின் பின்னரும் கேள்விப் பிரிவில் (SO/PT) வைத்திருக்கப்பட்டிருந்தது.

(இ) எட்டு வகையான விளையாட்டு உபகரணங்களில் 103 அலகுகளை பெற்றுக்கொள்வதற்காக 2012 மார்ச் 26 ஆந் திகதி வழங்குனருக்கு கட்டளை சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2013 பெப்ரவரி 07 ஆந் திகதி வரை அவை விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வழங்குனர்களால் சமர்ப்பிக்கப்படுகின்ற விலைமனுக்களின் செல்லுபடியாகும் காலத்தினுள் கட்டளைகளைச் சமர்ப்பிக்க முடியாது போனமை காரணமாக ரூபா 123,581 பெறுமதியான 12 மைக்ரோவேவ் அவன்களை கொள்வனவு செய்வதற்கு இலங்கை கடற்படைக்கு முடியாது போயிருந்தது.

(உ) வழங்குனர்களால் இலங்கை கடற்படைக்கு வழங்கப்படுகின்ற பொருட்களின் பெறுமதியினைக் காட்டிலும் கூடுதலாக ரூபா 8,352,000 தொகை வழங்குனர்களிற்குச் செலுத்தப்பட்டிருந்ததுடன் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்த தொகை2 முதல் 360 நாட்கள் வரையான காலத்தில் வழங்குனரிடம் வைத்திருக்கப்பட்டு பின்னர் மீண்டும் இலங்கை கடற்படைக்கு தீர்க்கப்பட்டிருந்தது. அதன்படி அரசாங்க நிதியினை துஷ்பிரயோகம் செய்வதற்கான சந்தர்ப்பத்தை இலங்கை கடற்படை வழங்குனருக்கு வழங்கியிருந்தது.

(ஊ) பொருட்களை வழங்குவதற்கு முன்னர் வழங்குனர்களிற்கு பணம் செலுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பங்களில் வழங்குனர்கள் பொருட்களை விநியோகிப்பதற்கு மறுத்திருந்ததுடன் அவ்வாறு செலுத்தப்பட்டிருந்த ரூபா 9,813,686 தொகையினை மீள அறவிட்டுக் கொள்வதற்காக வழங்குனருக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு இலங்கை கடற்படை மேற்கொள்ள வேண்டியதாயிற்று.

(எ) வழங்குனர்களால் சமர்ப்பிக்கப்படுகின்ற விலைமனுக்களின் செல்லுபடியாகும் காலத்தினுள் கட்டளைகளைச் சமர்ப்பிப்பதற்கு இலங்கை கடற்படை தவறியிருந்தமை காரணமாக ''கமீவ வோடர் ஜெட்'' (KAMEWA Water Jet) இற்கான 2 உதிரிப்பாகங்களையும் ''இலக்ரோனிக் பவர் சப்லை'' (Electronic Power Supply) அலகொன்றையும் வெளிநாட்டிலிருந்து கொள்வனவு செய்கையில் ரூபா 226,679 நிதிசார் நட்டம் ஏற்பட்டிருந்தது.

## 4. தலைப்பு 224 – இலங்கை வான்படை

### 4.1 கணக்காய்வின் நோக்கெல்லை

இலங்கை வான்படையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 ஒக்தோபர் 22 ஆந் திகதி வான்படைத் தளபதிக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 4.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 4.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் இலங்கை வான்படையின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (உ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 4.4 இலிருந்து 4.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு

அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என அவதானிக்கப்பட்டது.

**(அ) ஏடுகள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்காமை**

(i) இலங்கை வான்படையால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்காமை தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டன.

| **பதிவேட்டின் வகை** | **தொடர்புடைய பிரமாணம்** |
| --- | --- |
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| பொறுப்புக்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 211 |

(ii) மீளாய்வாண்டில் இலங்கை வான்படைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த 04 கணக்காய்வு ஐயவினாக்களிற்கு பதில்கள் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு நடவடிக்கைகளிற்குத் தேவையான தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு அவ்வவ் விடயங்களிற்கான அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டிருந்த தரப்பினரை இனங்காணும் நோக்கத்துடன் வான்படை தளபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த 29 தகவல்களை கோரும் கடிதங்களால் கோரப்பட்டிருந்த தகவல்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால், அந்த விடயங்களுடன் சம்பந்தப்பட்ட கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருந்ததுடன் முறைப்படியாக பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்பட்டு வருகின்றதா என்பதனையும் உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**(ஆ) பாதீட்டு முரண்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செலவின விடயமொன்றிற்காக 2012 ஆம் ஆண்டில் ரூபா 140,000,000 ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் மீளாய்வாண்டில் ரூபா 25,954,293 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி ரூபா 114,045,707 அல்லது மொத்த தேறிய ஏற்பாட்டில் 81.46 சதவீத ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) ஏழு செலவின விடயங்களிற்காக குறைநிரப்பு மதிப்பீட்டினால் பெற்றுக்கொண்டிருந்த ரூபா 155,000,000 ஏற்பாட்டிலிருந்து ஆண்டின் போது

ரூபா 65,453,566 பயன்படுத்தப்பட்டிருந்தது. மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 89,546,434 ஆன ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அந்த சேமிக்கப்பட்ட ஏற்பாட்டில் 03 சந்தர்ப்பங்களில் குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீட்டின் கீழ் பெற்றுக்கொண்டிருந்த ஏற்பாடுகளிலிருந்து ரூபா 40,000,000 ஆன ஏற்பாடு முழுவதும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) இலங்கை வான்படைக்கு குறித்துரைத்த பணிகளை நிறைவேற்றுவதற்காக ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகளின் பெறுமதி ரூபா 554,676,404 ஆக காணப்பட்டதுடன் அதில் ரூபா 452,005,621 மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. அதன்படி, ரூபா 102,670,783 ஆன ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. போதியளவான காலஎல்லையில் ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருக்காமை மற்றும் ஏனைய காரணங்களால் ரூபா 59,825,000 ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த 03 கருமங்கள் முழுமையாகவே நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**(இ) கட்டுநிதிக் கணக்கு**

2013 ஏப்ரல் 30 ஆந் திகதியளவில் இலங்கை வான்படையால் தீர்க்கப்படாதிருந்த கட்டுநிதி மீதிகளின் மொத்தம் ரூபா 150,202,634 ஆகும். அதில் ரூபா 574,452 தொகை 2001 ஆம் ஆண்டு முதல் நிலவிவரும் மீதியாகும். அத்துடன் கட்டு மீதியைத் தீர்க்காதிருந்தமைக்கு தாக்கமளித்த காரணிகள் ஒதுக்கீட்டுக் கணக்கில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) பொது வைப்புக் கணக்கு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) திறைசேரி கணனி அச்சுப்பிரதியின் படி 6000/0000/00/0011/0585/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 21,225,820 மீதி காணப்பட்டதுடன் அம் மீதி 2012 ஆம் ஆண்டிற்குரிய ஒதுக்கீட்டுக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் 6000/0000/00/0015/0105/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கிற்குரிய திறைசேரி கணனி அச்சுப் பிரதியின் படி மீதி ரூபா 63,650,386 ஆகக் காணப்பட்டதுடன் அம் மீதி 2012 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டுக் கணக்கில் ரூபா 63,641,018 எனக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் கொள்கல முற்பணங்களாக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 105,626 தொகை வழங்கப்பட்டிருந்த

அறிவுறுத்தல்களின் பிரகாரம் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்படாது 2013 ஏப்ரல் 30 ஆந் திகதிளவிலும் கூட பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

**(உ) வருமானக் கணக்குகள்**

20-03-02-16 ஆம் இலக்க வருமானக் குறியீடு தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் வருமானக் கணக்கின் படி ரூபா 23,872,454 வருமானம், நிலுவையாகக் காணப்பட்டதுடன் அது தொடர்பான காலப்பகுப்பாய்வு கீழே காட்டப்பட்டுள்ளது.

காலப்பகுப்பாய்வு

| 1 ஆண்டிற்கு குறைந்த | 1 ஆண்டிற்கு மேல் 3 இற்கு குறைந்த | 3 இற்கு மேற்பட்ட | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வருமானம் |
|---|---|---|---|
| ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 9,254,535 | 10,951,531 | 3,666,388 | 23,872,454 |

(ii) வருமானக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்த நிலுவை வருமானத்தை உறுதிப்படுத்திக்கொள்ளக் கூடிய வைகயில் தகவல்களை உள்ளடக்கி 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வருமான அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2012 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 97,080,703 இனால் குறைவடைந்திருந்ததுடன் நிலுவை வருமானம் 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 16,919,786 இனால் அதிகரித்துமிருந்தது.

(iii) 2010 ஆம் ஆண்டு முதல் பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்த ரூபா 205,790 ஆகாய விமான வாடகை வருமானம் அரசாங்க வருமானத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 175,573,860 ஆகாய விமான வாடகை வருமானத்தில் ரூபா 10,697,417 விமானப் படையின் உள்ளக நிதியத்திற்குச் செலவு வைக்கப்பட்டுமிருந்தது.

(iv) விமானச் சேவை நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் வான் படையின் கீழுள்ள தனியார் கம்பனியொன்றினால் வாடகை வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அக் கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகள்

தொடர்பான விபரங்கள் மற்றும் வருமானச் சேகரிப்பு தொடர்பான பற்றுச் சீட்டுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன்படி, சேகரிக்கப்பட்ட சகல வருமானங்களும் வருமானக் கணக்கிற்குச் செலவு வைக்கப்பட்டிருந்ததா என்பதனை பரீட்சிக்க முடியவில்லை.

(v) 2012 யூன் 30 மற்றும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதிகளில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலுவை வருமான அறிக்கைகளில் 2011 ஆம் ஆண்டிற்குரிய வருமான நிலுவை புறம்பாக காட்டப்படாதிருந்ததுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வருமான நிலுவை அறிக்கையிலுள்ள தொகையை அத்தினத்திலான வருமானக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்த தொகையுடன் கணக்கிணக்கம் செய்யக்கூடிய விதத்தில் வருமான நிலுவை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வருமான நிலுவை அறிக்கையின் படி 2011 ஆம் ஆண்டிற்கான வருமான நிலுவை ரூபா 3,286,280 எனக் காட்டப்பட்டிருந்த போதிலும், 2012 ஆம் ஆண்டின் வருமானக் கணக்கில் முன்னைய ஆண்டிற்கான வருமான நிலுவை ரூபா 11,652,478 எனக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(vi) நிதிப்பிரமாணம் 177(4) இன் படி 2012 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளில் சேகரிக்கப்பட்ட விமான வாடகைகள் தொடர்பில் சேகரிக்கப்பட்ட தொகைகளையும் அனுப்பிவைக்கப்பட்ட தொகைகளையும் பற்றுச்சீட்டு இலக்கங்களுடன் தொடர்புபடுத்தி அறிக்கையினை தயாரித்து மாதந்தோறும் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

--------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2011 ஆம் ஆண்டின் இறுதியில் சிவில் பிரிவிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 16,087,477 கடன் தொகை மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 17,624,415 வரை அதிகரித்திருந்தது.

(ii) ஓய்வுபெறும் உத்தியோகத்தர்கள் தொடர்பில் தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.4 ஆம் பிரிவின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை காரணமாக சேவைகள் மற்றும் சிவில் பிரிவுக்குரிய ஓய்வுபெற்ற மற்றும் மரணித்தவர்களிடமிருந்து முறையே ரூபா 1,061,594 மற்றும் ரூபா 3,460,351 கடன் தொகைகளை அறவிட முடியாது போயிருந்தது. பழைய கடன் மீதிகளுக்குரிய சில கோவைகள் காணாமல் போயிருந்தன.

(iii) சேவைகள் மற்றும் சிவில் பிரிவுக்குரிய 5 ஆண்டுகளைக் கடந்த கடன் மீதிகளின் மொத்தம் முறையே ரூபா 982,852 மற்றும் ரூபா 6,298,524 என்பனவாகும். 2012 ஏப்ரல் 17 ஆந் திகதி அரசாங்க நிதி திணைக்களத்தினால் நிலுவை கடன் மீதிகளை அறவிடுவதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் வான் படைக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2013 மே மாதம் வரை அதன் படி நடவடிக்கைகளை மேற்கொண்டு கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.4.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவன தலைவர்களிற்கு முகவரியிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட 2002 செப்தம்பர் 12 மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கைகளின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் இலங்கை வான் படையால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியொன்றுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டிய போதிலும், 2002 ஆம் ஆண்டு முதல் கடந்த 10 ஆண்டுகளுக்குரிய செயலாற்றல் அறிக்கையும் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கையும் 2013 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

(அ) நடைமுறையல்லாத சொத்துக்கள் தொடர்பான அசைவு அறிக்கையினை பரீட்சித்ததில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) 2011 திசெம்பர் 31 வரையான சொத்துக்கள் 2012 சனவரி 01 ஆந் திகதியிலுள்ளவாறு முன்கொண்டு வரப்படுகையில் ரூபா 525,233,980 ஆன சொத்துக்கள் காரணங்கள் காண்பிக்கப்படாது கைவிடப்பட்டிருந்ததுடன் ரூபா 1,842,392,775 ஆன சொத்துக்கள் அந்த அறிக்கையில் புதிதாக உள்ளடக்கப்பட்டிருந்தன.

(ii) 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த நடைமுறையல்லாத சொத்துக்களின் மொத்தப் பெறுமதி அந்த அறிக்கையில் ரூபா 235,209,385 எனக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன்

ஒதுக்கீட்டுக் கணக்கின் DGSA – 4 ஆம் படிவத்தில் அது ரூபா 1,685,542,569 எனக் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் படி ரூபா 1,450,333,184 ஆன சொத்துக்கள் நடைமுறையல்லாத சொத்துக்கள் தொடர்பான அசைவு அறிக்கையில் காட்டப்பட்டிருக்கவில்லை.

அதன் படி 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறையல்லாத சொத்துக்களின் பெறுமதி ரூபா 70,344,035,950 என ஒதுக்கீட்டுக் கணக்கில் காட்டப்பட்டிருந்த போதிலும், மேற்படி குறைபாடு உள்ளிட்ட நிலையான சொத்துப் பதிவேட்டினை பராமரிக்காமை மற்றும் பௌதீக ரீதியில் சொத்துக்களை மெய்மையாய்வு செய்யாமை போன்ற காரணங்களால் அப் பெறுமதி திருத்தமற்றதாகும் என்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) வான் படைக்குரிய கணனித் துணைப்பாகங்கள் மற்றும் மென்பாகங்கள் தொடர்பில் 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் படி கணனித் துணைப்பாகங்கள் மற்றும் வன்பாகங்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. அத்துடன் வான் படைக்குச் சொந்தமான கணனிகள் தொடர்பில் ஒதுக்கீட்டுக் கணக்கில் நடைமுறையல்லாத சொத்துக்கள் தொடர்பான அசைவு அறிக்கையில் ஆரம்ப மீதி காண்பிக்கப்படாதிருந்ததுடன் ஆண்டின் போதான சேர்த்தல்கள் என ரூபா 1,916,800 உள்ளடக்கப்பட்டிருந்தது. அது தொடர்பான விரிவான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

இலங்கை வான் படையால் நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் பதிவேடு பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. நிதிப்பிரமாணம் 94 இற்கு முரணாக மீளாய்வாண்டிற்கான 30 செலவின விடயங்களிற்கு மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 4,426,160,796 ஆன ஏற்பாட்டினை ரூபா 1,653,295,756 ஆல் மிகைத்து ரூபா 6,079,456,552 பயன்பாட்டிற்கான பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தன.

## 4.6 செயலாற்றல்

2012 இன் வருடாந்த மதிப்பீடு, கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம் என்பவற்றின் பிரகாரம் வான்படையின் செயலாற்றல் மீதான அவதானிப்புகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் கூட்டிணைந்த திட்டம் என்பவற்றுடன் இணங்காமை

கூட்டிணைந்த திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த மீளாய்வாண்டிற்கான இலக்குகளை அடைவதற்கான பாதீட்டு ஏற்பாடுகள் செய்துகொள்ளப்பட்டு அந்த நிதி ஆண்டின் போது

பயன்படுத்தப்படும் விதமும் நிதிசார் மற்றும் பௌதீக இலக்குகளின் பொறுப்புக்களும் நிச்சயிக்கப்பட்டு காலரீதியாக உள்ளபடியான மீதிகளுடன் ஒப்பிட்டு தேவையான திருத்தங்களுடன் தேவையான இலக்குகளை நோக்கிச் செயற்படுவதற்காக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான கட்டுப்பாடு ஏற்படும் வகையில் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.7 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்**

இலங்கை வான் படையால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல்வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையானவையாக காணப்பட்டன. தெரிவுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல்வாங்கல்களின் விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்களுடன் தொடர்புடைய ஒப்பந்தங்கள்

(i) ஒவ்வொரு நிர்மாண நடவடிக்கையுடனும் தொடர்புடைய செலவினத்தை வெவ்வேறாக கணிப்பிடுவதற்கும் அதற்கமைய குறித்த சொத்தின் பெறுமதியை கணிப்பிடுவதற்கும் ஏற்ற விதத்தில் வான் படையினால் ஒப்பந்தங்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

(ii) உள்வாரி நிதியங்களிற்கு செலவு வைக்கப்படுகின்ற நிதியும் வான் படையின் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்டிருந்ததுடன் அது தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) வாகனப் பயன்பாடு

2011 ஆம் ஆண்டில் வான் படையால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த பதவிநிலை வாகனங்கள் மற்றும் வாடகை அடிப்படையின் கீழ் பெறப்பட்டிருந்த 40 பதவிநிலை வாகனங்கள் கொழும்பை அண்மித்த பகுதிகளில் பயணிக்கையில் லீற்றரொன்றுக்கு பயணித்திருந்த கிலோமீற்றர் எண்ணிக்கை 5 முதல் 11 வரையான வீச்சில் காணப்பட்டிருந்தமை 2012 யூன் மாதத்திற்குரிய ஓட்ட அறிக்கைகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்பட்டிருந்தது.

## 4.8 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

இலங்கை வான் படையால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல்வாங்கல்கள் முறையற்றதாக காணப்பட்டன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) கொள்வனவு வழிகாட்டல் நடைமுறைகளிலிருந்து விலகுதல்

(i) வான் படையின் உத்தியோகத்தர்களிற்காக 3000 சப்பாத்து சோடிகளை கொள்வனவு செய்வது தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

- விமானப்படையின் உத்தியோகத்தர்களிற்காக மீளாய்வாண்டில் திறந்த கூறுவிலைகளைக் கோரி தனியார் கம்பனியொன்றிடமிருந்து ஒரு சோடி ரூபா 4,575 வீதம் 3000 கறுப்பு தோல் சப்பாத்துச் சோடிகளைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 13,725,000 செலவிடப்பட்டிருந்தது. இதற்காக ஐந்து விலை மனுதாரர்கள் கூறுவிலைகளைச் சமர்ப்பித்திருந்தனர். கொள்வனவு நிபந்தனைகளின் படி விலைமனுதாரர்களால் கூறுவிலைகளுடன் மாதிரிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், தெரிவுசெய்யப்பட்டிருந்த வழங்குனரால் கூறுவிலைகள் கோரப்பட்டு முடிவடைந்திருந்த திகதியிலிருந்து 08 நாட்களின் பின்னர் மாதிரி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.
- அந்தக் கொள்வனவிற்காக நியமிக்கப்பட்டிருந்த தொழில்நுட்ப மதிப்பீட்டுச் சபையில் சப்பாத்துச் சோடிகள் தொடர்பில் அறிவுடைய உத்தியோகத்தர் ஒருவர் இருந்தமைக்கான எழுத்துமூலச் சான்று சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் வழங்குனர் கூட சப்பாத்து உற்பத்தியில் நிபுணத்துவமுடைய கம்பனியொன்றாக இருக்கவில்லை. அத்துடன், உத்தியோகத்தர் ஒருவருக்கு 1 ½ வருட காலத்திற்காக சப்பாத்துச் சோடியொன்று வழங்கப்படுவதுடன் சப்பாத்துகளிற்கான உத்தரவாதக் காலம் மூன்று மாதங்களிற்கு வரையறுக்கப்பட்டிருந்தது.
- 2011 ஆம் ஆண்டில் மற்றுமோர் உள்நாட்டு சப்பாத்துக் கம்பனியொன்றிடமிருந்து ரூபா 2,822 வீதம் 2000 சப்பாத்துச் சோடிகள் கொள்வனவு செய்யப்பட்டு அதில் 700 சோடிகள் உத்தியோகத்தர்களிற்கு விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் அந்த உற்பத்திப் பொருட்களின் தரம் தொடர்பில் எவ்வித எழுத்துமூல முறைப்பாடுகளின்றியும் மேலும் 1300 சோடி சப்பாத்துக்கள் களஞ்சியத்தில் காணப்படும் நிலையிலும் ரூபா 4,575 வீதம் 3000 சோடி சப்பாத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

- 2012 ஆம் ஆண்டில் கூறுவிலைகளைக் கோருகையில் முன்னைய ஆண்டில் வழங்குனராக தெரிவுசெய்யப்பட்டிருந்த சப்பாத்து உற்பத்திக் கம்பனியும் கூறு விலைகளைச் சமர்ப்பித்திருந்ததுடன் அந்த கூறுவிலைகளிற்கிடையே (ரூபா 2,419 மற்றும் ரூபா 2,741) அதிகூடிய கூறுவிலையான ரூபா 2,741 வீதம் 3000 சோடி சப்பாத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருப்பின் வான்படை செலவிட்டிருந்த தொகையில் ரூபா 5,502,000 ஐச் சேமிக்கக் கூடியதாக இருந்திருக்கும்.

(ii) அலுவலகத் தேவைகளுடன் இணங்கக்கூடிய பண்புகளை இனங்காணாது கட்டுநாயக வழங்கல்கள் மற்றும் விநியோகங்கள் களஞ்சியத்தினூடாக சாய்மனையுடன் கூடிய 300 நாற்காலிகளைக் கொள்வனவு செய்வதற்காக கூறுவிலைகள் கோரப்பட்டிருந்ததுடன் அந்தக் கூறுவிலைகளில் குறிப்பிடப்பட்டிருந்த பண்புகளுடன் இணங்கிய வகையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த குறைந்த விலையான ரூபா 4,256 (பெறுமதிசேர் வரி உள்ளடங்கலாக) வீதம் நாற்காலிகளைக் கொள்வனவு செய்வதற்குப் பதிலாக கூடிய விலையினை சமர்ப்பித்திருந்த விலைமனுதாரரிடமிருந்து ஒன்று ரூபா 6,468 வீதம் 300 நாற்காலிகள் ரூபா 1,940,400 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதன்படி ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டிருந்த பண்புகளிற்கு அமைவாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த குறைந்த விலையான ரூபா 4,256 இற்குப் பதிலாக கூடிய விலையான ரூபா 6,468 வீதம் 300 நாற்காலிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையால் வான் படைக்கு ரூபா 663,600 நட்டம் ஏற்பட்டிருந்தது.

(iii) பெல் 212 ஹெலிகொப்டரின் இயந்திரத்தைத் திருத்துவதற்காக 2012 சனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் நாணயக் கடிதத்தின் மூலம் வெளிநாட்டுக் கம்பனியொன்றிற்கு ரூபா 32,610,978 செலுத்தப்பட்டிருந்ததுடன் அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- மட்டுப்படுத்திய சர்வதேச கூறுவிலை கோரலுக்கான குறைந்த கால எல்லையாக 42 நாட்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும், அதற்காக 21 நாட்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன. தொழில்நுட்ப மதிப்பீட்டுச் சபையினாலும் கொள்வனவுச் சபையினாலும் மேற்கொள்ளப்பட்டிருந்த தீர்மானங்களின் முறையற்ற தன்மை காரணமாகவும் அவற்றை சரி செய்வதற்கு காலஞ் செல்வதாலும் கொள்வனவுச் சபைக்கு தீர்மானத்தை மேற்கொண்டு கட்டளையினை வழங்குவதற்காக ஏறத்தாழ 10 மாத காலம் சென்றிருந்தது.
- நிரந்தர விலையினை அறிவிப்பதற்கு முன்னர் இந்த இயந்திரத்தைப் பரிசோதித்துப் பார்ப்பதற்காக பெல் விமான உற்பத்தியில் தொழில்சார்

அனுபவம் கொண்ட வெளிநாட்டுக் கம்பனியொன்றின் பிரிதிநிதி யொருவரிடமிருந்து நேரடியான பங்களிப்பு பெற்றுக் கொள்ளப்படாதிருந்ததுடன் வெளிநாட்டுக் கம்பனியின் உள்நாட்டு முகவரினால் பெயர் குறிப்பிடப்பட்ட வான் படையிலிருந்து ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் ஒருவரினால் அது பரிசோதிக்கப்பட்டிருந்தது. அப் பரிசோதனை அறிக்கையில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக முன்னர் இணங்கப்பட்ட யூஎஸ்டொலர் 155,910 தொகை பின்னர் வெளிநாட்டுக் கம்பனியினால் யூஎஸ்டொலர் 278,959 வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. அதன்படி அந்த திருத்தத்திற்காக வான் படையினால் யூஎஸ்டொலர் 123,049 மேலதிகமாகச் செலுத்தவேண்டியதாயிற்று.

(ஆ) அதிகாரமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் பின்வரும் அதிகாரமற்ற கொடுக்கல்வாங்கல்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பீ.வீ.ஆர் அடிப்படையின் கீழ் கொள்வனவு செய்தல் (PVR)

வான் படையால் பீ.வீ.ஆர் அடிப்படையின் கீழ் (பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ள முன்னர் பணம் செலுத்துதல்) பொருட்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டில் ரூபா 238,157,435 செலவிடப்பட்டிருந்தது. இக் கொடுப்பனவு முறைக்காக திறைசேரியிடமிருந்து விசேட அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படும் என வான் படையால் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் இணங்கப்பட்டிருந்த போதிலும், 2012 ஆம் ஆண்டிலும் அதற்குத் தேவையான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) விமானப் படை ஈட்டுகின்ற வருமானம் திரட்டிய நிதியத்தில் செலவு வைக்கப்படாமை

2011 யூன் 23 ஆந் திகதி இடம்பெற்ற அரசாங்க கணக்குகள் மீதான குழவின் பணிப்புரைக்கும் பொது நிர்வாக அமைச்சின் தாபன விதிகள் பணிப்பாளர் நாயகத்தினால் பாதுகாப்பு அமைச்சின் செயலாருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த 2003 திசெம்பர் 09 ஆந் திகதிய ஆ/iv/5/4/11 ஆம் இலக்க கடிதத்திற்கும் தாபன விதிக் கோவையின் IX ஆம் அத்தியாயத்தின் 2.4 ஆம் பிரிவுக்கும் இணங்கி ஒழுகாது விமானப் படையால் கீழே குறிப்பிடப்பட்டவாறு ஈட்டப்பட்ட வருமானம் உள்வாரி நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

- 2012 சனவரி முதல் செப்தெம்பர் வரை கொழும்பிலுள்ள முகாமை வாடகைக்கு வழங்கியமையால் ரூபா 294,000 வருமானம் ஈட்டப்பட்டிருந்ததுடன் அதில் அரசாங்க வருமானத்திற்கு ரூபா 19,800 மாத்திரம் செலவு வைக்கப்பட்டிருந்தது. எஞ்சிய தொகை கொழும்பு முகாமின் உள்வாரி நிதியமான சேவைகள் தாபன நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அத்துடன், 2011 சனவரி முதல் திசெம்பர் வரை இக் கட்டிடத்தை வாடகைக்கு வழங்கியமையால் கிடைத்திருந்த வருமானத்திலிருந்து அரசாங்க வருமானத்திற்கு ரூபா 22,400 செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் கொழும்பு முகாமின் சேவைகள் தாபன நிதியத்திற்கு (SIF) செலவு வைக்கப்பட்டிருந்த தொகை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.
- கொழும்பு முகாமின் விளையாட்டு மைதானத்தை வாடகைக்கு வழங்கியமையால் 2011 ஆகஸ்ட் முதல் 2012 ஆகஸ்ட் வரை ரூபா 366,000 ஈட்டப்பட்டிருந்ததுடன் அத் தொகையனைத்தும் வான் படையின் கொழும்பு முகாமிலுள்ள சேவைகள் தாபன நிதியத்தில் (SIF) செலவு வைக்கப்பட்டிருந்தது.
- தியதலாவ, மீரிகம, கடுகுருந்த, அம்பாறை, ரத்மலானை, சீனக்குடா, ஏக்கல, மொரவெவ, வவுனியா, பாலாவி, கொக்கல, வீரவில, சீகிரிய மற்றும் அநுராதபுரம் ஆகிய வான் படை முகாம்களில் அமைந்துள்ள அரசாங்க கட்டிடங்களை வாடகைக்கு வழங்கியமையால் 2012 சனவரி முதல் செப்தெம்பர் வரையான காலத்தில் அறவிடப்பட்டிருந்த கட்டணங்களில் ஒரு பகுதியான ரூபா 157,077 அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் அந்த முகாம்களிலுள்ள உள்ளக நிதியங்களிற்கு மேற்குறித்த காலத்தில் செலவு வைக்கப்பட்டிருந்த தொகை தொடர்பான விபரங்களை பரிசோதிப்பதற்குத் தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.
- வான் படையினால் இவ்வாறு சேகரிக்கப்பட்டிருந்த வருமானம் தொடர்பில் நிதிப்பிரமாணம் 174(4) இன் பிரகாரம் மாதாந்த அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) உள்ளக நிதியங்களை பேணுதல்

வான் படை தளபதியின் 2011 நவம்பர் 30 ஆந் திகதிய 852a ஆம் இலக்க வான் படை கட்டளையின் 05 ஆம் பந்தியின் படி, வான் படையின் தலைமையகம், பல்வேறு முகாம்கள் மற்றும் பிரிவுகளில் 96 உள்ளக நிதியங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இந்த நிதியங்களின் செயற்பாட்டிற்காக வான் படையிடமுள்ள பௌதீக மற்றும் மனித வளங்கள் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அதற்குரிய கணக்காய்வு நடவடிக்கைகளிற்காக கோரப்பட்டிருந்த தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.9 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

2012 ஆம் ஆண்டில் 40,000 நீல வர்ண துவாய்களைக் கொள்வனவு செய்வது தொடர்பில் வெளிவாரி நிறுவனமொன்றினால் ஆய்வுகூட பரிசோதனைக்கு உட்படுத்தப்படுதல் கட்டணமாக 12 நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட்டிருந்த ரூபா 240,000 தொகை பொது வைப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்ததுடன், அத் தொகை செலவிடப்படாது 2013 மார்ச் 31 ஆந் திகதி வரை பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது. இருப்பினும், 11 நிறுவனங்களிற்கான குறித்த ஆய்வுகூட பரிசோதனைக் கட்டணம் வருடாந்த ஏற்பாட்டுத் தொகையிலிருந்து செலவிடப்பட்டிருந்ததுடன் அப் பரிசோதனை மூலம் பரிந்துரைக்கப்பட்டிருந்த நிறுவனங்களைக் கருத்திற்கொள்ளாது வேறு நிறுவனமொன்றிடமிருந்து ரூபா 15,680,000 இற்கு நீல வர்ண துவாய்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

## 4.10 முகாமைத்துவ பலவீனங்கள்

தீர்வுகாணப்பட்டிருக்காத கணக்காய்வுப் பந்திகள்

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வுப் பந்திகள் அரசாங்க கணக்குகள் குழுவால் பரிசோதிக்கப்பட்டு பணிப்புரைகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2013 நவம்பர் 30 ஆந் திகதி வரை அப் பணிப்புரைகளிற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| அரசாங்க கணக்குகள் குழுக் கூட்டம் இடம்பெற்ற திகதி | பணிப்புரை இல. | கணக்காய்வுப் பந்தி |
|---|---|---|
| (i) 2011 யூன் 23 | 10 | அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணங்கள் கணக்கில் காணப்படுகின்ற பழைய நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுத்தல். |

| | | |
|---|---|---|
| (ii) 2011 யூன் 23 | 18(II) | விளையாட்டு மைதானத்தை வாடகைக்கு வழங்கி வருமானம் மற்றும் ஏனைய சேகரிப்புக்களை திரட்டிய நிதியத்திற்கு செலவு வைத்தல் |
| (iii) 2011 யூன் 23 | 16 | ஒதுக்கீட்டுக் கணக்கில் காட்டப்படுகின்ற பெறுமதிகளை உறுதிப்படுத்திக்கொள்ளக்கூடிய வகையில் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்றை பராமரித்தல் |

## 5. தலைப்பு 225 – பொலிஸ் திணைக்களம்

### 5.1 கணக்காய்வின் நோக்கெல்லை

பொலிஸ் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 யூன் 05 ஆந் திகதி பொலிஸ் மா அதிபருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 5.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட

கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 5.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் பொலிஸ் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (இ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 5.4 இலிருந்து 5.14 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என அவதானிக்கப்பட்டது.

### (அ) பாதீட்டு முரண்

06 செலவின விடயங்களிற்கு கூடுதலாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு ரூபா 197,178,699 ஆக காணப்பட்டதுடன் அது அச்செலவின விடயங்களிற்குரிய தேறிய நிதி ஏற்பாட்டின் 5 சதவீதத்திற்கும் 44 சதவீதத்திற்கும் இடைப்பட்ட அளவினைக் கொண்டதாக காணப்பட்டது.

### (ஆ) பொது வைப்புக் கணக்கு

(i) 2 வருடத்திற்கும் மேற்பட்ட ரூபா 14,719,138 மொத்தமான 301 வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2011 இன் 69 ஆம் இலக்க பெறுமதிசேர் வரி (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் 06(2) மற்றும் (3) ஆம் உப பிரிவின் படி பெறுமதிசேர் வரிகள் அறவிடப்பட்டு மாதாந்த அடிப்படையில் அடுத்துவரும் மாதத்தின் 20 ஆந் திகதிக்கு முன்னரும் நிறுத்தி வைத்தல் வரிகள் காலாண்டு முடிவுற்று அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னரும் முத்திரை வரிகள் ஏற்பாடுகளில் காட்டப்பட்டுள்ளவாறு அறவிடப்பட்டு அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னரும் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பவேண்டிய போதிலும், நிறுத்தி வைத்தல் வரி, பெறுமதிசேர் வரி மற்றும் முத்திரை வரிகளின் ரூபா 1,537,662 கூட்டுத்தொகை உரிய காலத்தில் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்படாது பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

(iii) கட்டிடங்கள் பிரிவின் ரூபா 37,703 தொகையான 12 வைப்புக்கள் தொடர்பில் வைப்புச்செய்யப்பட்ட காரணம் குறித்த தகவல்கள் பொது வைப்புக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணைக்கக் கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளில் மரணித்த மற்றும் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 40,600,688 மொத்தமான கடன் மீதிகளும் உள்ளடங்கியிருந்தன. ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களின் ஓய்வூதியங்களைச் செலுத்துகின்ற சந்தர்ப்பங்களிலும் மரணித்த உத்தியோகத்தர்களின் விதவைகள் அநாதைகள் நிதியத்திலிருந்து நலன்கள் செலுத்தப்படுகின்ற சந்தர்ப்பங்களிலும் அறவிடப்பட வேண்டிய மீதிகளை தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.3, 4.2.4 மற்றும் 4.2.5 ஆம் பிரிவுகளின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், பொலிஸ் திணைக்களம் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) பதவி நீக்கம் செய்யப்பட்ட மற்றும் பதவி வறிதாக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மீதிகளின் பெறுமதி ரூபா 100,742,122 ஆகக் காணப்பட்டது. இந்த உத்தியோகத்தர்களிற்கு கடன்களை வழங்குகையில் கைச்சாத்திடப்பட்டிருந்த உடன்படிக்கையின் படி பிணைகள் வைக்கப்பட்டிருப்பின் அந்த பிணைதாரர்களிடமிருந்தோ அல்லது உடன்படிக்கையின் படி ஏனைய தரப்பினரிடமிருந்தோ குறித்த மீதிகளின் பெறுமதியை தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 ஆம் பிரிவின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், பொலிஸ் திணைக்களம் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அக் கடன் மீதியிலிருந்து ரூபா 5,850,896 தொகை தற்போது அறவிடப்பட்டுள்ளதுடன் எஞ்சிய தொகையினை அறவிடுவதற்கு உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள் என பொலிஸ் மா அதிபர் எனக்கு அறவித்திருந்தார்.

(iii) இணக்கக்கூற்றில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது ஏனைய கடன் மீதிகளாக காட்டப்பட்டிருந்த மட்டக்களப்பு பிரிவில் காணாமல் போயிருந்த, மரணித்த மற்றும் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட

வேண்டியிருந்த ரூபா 890,700 தொகை தொடர்பிலும் திருகோணமலை பிரிவில் இடர் கடன்கள் சம்பந்தமாக இடம்பெற்றிருந்த ரூபா 1,275,000 மோசடி தொடர்பிலும் அத் தொகைகளை அறவிடுவதற்கோ அல்லது பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) திணைக்களத்திலிருந்து ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிற்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 7,946,057 தொகையினை அறவிடுவதற்கு பொலிஸ் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இது தொடர்பில் 2009 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(v)** அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான கடன்கள் மற்றும் முற்பணங்கள் கட்டப்பாட்டுக் கணக்கின் படியான ரூபா 2,774,362,109 கடன் மீதியினை தனித்தனி வகைப்படுத்தல் பொழிப்பின் மொத்தமான ரூபா 2,696,758,365 உடன் ஒப்பிடுகையில் ரூபா 77,603,744 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. பிரிவு அலுவலகங்களின் கட்டுப்பாட்டுக் கணக்குகளில் சீராக்கப்பட்ட மொத்தத்திற்கும் தனித்தனி மீதிகளின் வகைப்படுத்தல் பொழிப்பின் மொத்தத்திற்கும் இடையே காணப்பட்ட ரூபா 15,594,265 வேறுபாட்டை சீராக்கிய பின்னரும் ரூபா 62,009,479 வேறுபாடு ஏற்பட்டிருந்ததுடன் வேறுபாட்டை இனங்கண்டு தீர்ப்பதற்கு 2013 யூன் 14 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 5.4.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளுராட்சி நிறுவன தலைவர்களிற்கு முகவரியிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து குறைந்தது அடுத்துவரும் 03 ஆண்டுகளிற்கான கூட்டிணைந்த திட்டமொன்று பொலிஸ் திணைக்களத்தால் வருடத்தின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்திட்டம் 2012 திசெம்பர் 31 வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.4.2 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

மேற்படி 5.4.1 இல் குறிப்பிடப்பட்ட அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்திற்கமைய பொலிஸ் திணைக்களத்தால் 2010 ஆம் அண்டிலிருந்து தொடர்ந்துவரும் ஆண்டுகளிற்காக வருடாந்த செயல் நடவடிக்கைத்

திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டமொன்று 2012 திசெம்பர் 31 வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.4.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

மேற்படி 5.4.1 இல் குறிப்பிடப்பட்ட பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 2002 செப்தம்பர் 12 402 ஆம் இலக்க மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402(1) ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கைகளின் பிரகாரம் திணைக்களத்தால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியொன்றுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை 2012 செப்தெம்பர் 28 ஆந் திகதி வரை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2013 மே 30 ஆந் திகதி வரை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

**5.4.4 வருடாந்த கொள்வனவுத் திட்டம்**

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான கொள்வனவுகள் திட்டம் 2012 திசெம்பர் 31 வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்தல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2012 ஆம் ஆண்டிற்கான மெய்மையாய்வு அறிக்கைளினால் சுட்டிக்காட்டப்பட்டிருந்த அநேகமான பொருட்களின் பற்றாக்குறைகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 757(2) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டிற்குரிய மெய்மையாய்வுச் சபை அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த பயன்படுத்த முடியாத அநேக வகைப் பொருட்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 770(2) மற்றும் 771(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5.6 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டுக் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவை | | |
| XII ஆம் அத்தியாயத்தின் 16.5 ஆம் பிரிவு | 489,720 | வெளிநாடு சென்றிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரால் கைச்சாத்திடப்பட்டிருந்த உடன்படிக்கை மீறலால் அறவிடப்பட வேண்டியிருந்த நிதிசார் தண்டப்பணமான ரூபா 489,720 தொகை 2013 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் கோவை | | |
| நி.பி. 880 | - | கொடஹேன பிரதான பொலிஸ் களஞ்சிய பொறுப்பாளரிடமிருந்து பிணைப்பணத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

**5.7 செயற்திட்டங்களை அமுல்படுத்தலில் பலவீனங்கள்**

**செயற்திட்டங்கள் பூரணப்படுத்தப்படாது கைவிடப்படுதல்**

பொலிஸ் திணைக்களத்தினால் பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் அச் செயற்திட்டங்கள் பூரணப்படுத்தப்படாது கைவிடப்பட்டிருந்தன.

| செயற்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் | ஆரம்பிக்கப்பட வேண்டிய திகதி | 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை செலவினம் | கைவிடப்பட்டிருந்தமைக்கான காரணம் |
|---|---|---|---|---|
| | ரூபா மில். | | ரூபா | |
| இங்கிரிய பொலிஸ் பயிற்சி நிறுவனத்தை நிர்மாணித்தல் | 21.9 | 2007 செப். 20 | 8,393,410 | கொள்வனவு நடவடிக்கைகள் உரியவாறு மேற்கொள்ளப்படாமை (2008 ஆகஸ்ட் 10 ஆந் திகதி பூரணப்படுத்தப்பட வேண்டியிருந்தது. |

இதற்காக செலவிடப்பட்டிருந்த தொகை விரயமாக இல்லாதிருப்பதுடன் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தை இங்கிரிய பொலிஸ் நிலையத்திற்கெனப் பெற்றுக்கொள்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் மா அதிபர் அறிவித்திருந்தார்.

### 5.8 செயலாற்றல்

இலங்கையில் 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகள் தொடர்பில் அறிவிக்கப்பட்டிருந்த கொள்ளையிடல்கள் (உடலியல் குற்றங்கள் மற்றும் ஆதனக் குற்றங்கள்) சம்பந்தமான மீளாய்வொன்று கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரை கொள்ளையிடல் குற்றங்கள் அறிவிக்கப்பட்டிருந்த எண்ணிக்கைகளும் சதவீதமும்

| | கொள்ளையிடல் குற்றங்கள் | 2010 | | | 2011 | | | 2012 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | அறிவிக்கப்பட்ட எண்ணிக்கை | தீர்க்கப்பட்ட எண்ணிக்கை | தீர்க்கப்பட்ட எண்ணிக்கை சதவீதமாக | அறிவிக்கப்பட்ட எண்ணிக்கை | தீர்க்கப்பட்ட எண்ணிக்கை | தீர்க்கப்பட்ட எண்ணிக்கை சதவீதமாக | அறிவிக்கப்பட்ட எண்ணிக்கை | தீர்க்கப்பட்ட எண்ணிக்கை | தீர்க்கப்பட்ட எண்ணிக்கை சதவீதமாக |
| | உடலியல் தவறுகள் | | | | | | | | | |
| 01 | ஆட்கொள்ளை/ஆட்கடத்தல் | 897 | 217 | 24.9 | 1012 | 202 | 19.96 | 1240 | 266 | 21.45 |
| 02 | பாரிய காயமேற்படுத்தல் | 1410 | 647 | 45.89 | 1719 | 728 | 42.35 | 1727 | 718 | 41.57 |
| 03 | கத்தி போன்றவற்றால் காயமேற்படுத்தல் | 2939 | 1095 | 37.26 | 2942 | 1033 | 35.11 | 2870 | 1060 | 36.93 |
| 04 | ஆட் கொலை/ தற்கொலைக்கு உதவுதல் | 745 | 249 | 33.42 | 707 | 231 | 32.67 | 646 | 183 | 28.33 |
| 05 | கொலை முயற்சி | 308 | 95 | 30.84 | 229 | 56 | 24.45 | 227 | 62 | 27.31 |
| 06 | கற்பழித்தல்/ சிறுவயது பெண் பிள்ளைகளுடன் பாலியல் வல்லுறவு | 1854 | 167 | 9.01 | 1870 | 235 | 12.57 | 2212 | 224 | 10.13 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 07 | துர்நடத்தைகள்/ஆண்களிடையே கடுமையான துர் நடத்தைகள் | 519 | 47 | 9.06 | 517 | 37 | 7.16 | 576 | 55 | 9.55 |
| 08 | பிள்ளைகளை மிருகத்தனமாக துன்புறுத்தல் மற்றும் பிள்ளைகளிடமிருந்து தவறான பாலியல் இன்பம் அனுபவித்தல் | 334 | 39 | 11.68 | 376 | 40 | 10.64 | 398 | 36 | 9.05 |
| 09 | பாலியல் நடவடிக்கைக்காக பெண்களை/பெண் பிள்ளைகளை வழங்குதல் மற்றும் வியாபாரம் செய்தல் | 47 | 12 | 25.53 | 56 | 05 | 8.93 | 31 | 03 | 9.68 |
| 10 | பாரதூரமான ஆயுதங்கள் அதிகாரச்சட்டத்தின் கீழ் வருகின்ற குற்றங்கள் | 277 | 29 | 10.47 | 147 | 29 | 19.73 | 162 | 16 | 9.88 |
| | மொத்தம் | **9330** | **2597** | **27.83** | **9575** | **2596** | **27.11** | **10089** | **2623** | **26.00** |
| | ஆதனக் குற்றங்கள் | | | | | | | | | |
| 01 | தீ வைத்தல் | 691 | 177 | 25.62 | 576 | 141 | 24.48 | 585 | 149 | 25.47 |
| 02 | ரூபா 5,000 இற்கு மேற்பட்ட நட்டத்தை ஏற்படுத்தக்கூடிய விதத்தில் மேற்கொள்ளப்பட்ட அனர்த்தங்கள் | 1323 | 428 | 32.35 | 1069 | 304 | 28.44 | 1096 | 313 | 28.56 |
| 03 | வீடுகளை உடைத்தல் மற்றும் களவாடுதல் | 18665 | 3224 | 17.27 | 17192 | 2954 | 17.18 | 16763 | 2948 | 17.59 |
| 04 | கலவரங்களை ஏற்படுத்தல் | 14 | 05 | 35.71 | 25 | 10 | 40.00 | 18 | 06 | 33.33 |
| 05 | கொள்ளையடித்தல் | 6521 | 1422 | 21.81 | 6304 | 1588 | 25.19 | 6552 | 1447 | 22.08 |
| 06 | பலாத்காரமாக பறித்தெடுத்தல் | 103 | 48 | 46.60 | 125 | 47 | 37.60 | 138 | 47 | 34.06 |
| 07 | ஏமாற்றுதல்/மோசடியாக கையொப்பம் வாங்குதல் ரூபா 100,000 இற்கு மேற்பட்ட பெறுமதி தொடர்பில் நம்பிக்கைத் துரோகம் செய்தல் | 7238 | 2777 | 38.37 | 6365 | 1865 | 29.30 | 8820 | 2378 | 26.96 |
| 08 | பெருந்தோட்டப் பொருட்கள் அடங்கலாக ரூபா 5,000 இற்கு மேற்பட்ட ஆதனக் களவு மற்றும் எந்தவொரு பெறுமதி கொண்டதுமான சைக்கிள் மற்றும் மாடுகளைக் களவாடுதல் | 12680 | 3753 | 29.60 | 11962 | 3649 | 30.50 | 11704 | 3773 | 32.24 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 09 | கள்ளப் பண நோட்டுக்களை அச்சடித்தல் | 38 | 05 | 13.16 | 47 | 04 | 8.51 | 45 | 07 | 15.56 |
| 10 | அரச விரோதக் குற்றங்கள் | 15 | 02 | 13.33 | 08 | 0 | 0.00 | 05 | 01 | 20.00 |
| 11 | தன்னியக்க மற்றும் ரிபிடர் இரவை துப்பாக்கிகளை வைத்திருத்தல் | 80 | 09 | 11.25 | 52 | 07 | 13.46 | 32 | 08 | 25.00 |
| 12 | ஹெரொயின், கொகேன், மோபின் போன்றவற்றை உற்பத்தி செய்தல், வியாபாரம் செய்தல், ஏற்றுமதி அல்லது இறக்குமதி செய்தல், ஹெரொயின் 2 கிராம் அல்லது அதற்கு மேற்பட்ட அபின் 500 கிராம் அல்லது அதற்கு மேற்பட்ட கஞ்சா 05 கிலோகிராம் அல்லது அதற்கு மேற்பட்ட ஹசிஸ் 1 கிலோ கிராம் அளவான அபாயகரமான போதைப்பொருட்களை வைத்திருத்தல் | 862 | 132 | 15.31 | 1067 | 259 | 24.47 | 1315 | 448 | 34.07 |
| | மொத்தம் | **48230** | **11982** | **24.84** | **44792** | **10828** | **24.17** | **47073** | **11525** | **24.48** |
| | கூட்டு மொத்தம் | **57560** | **14579** | **25.33** | **54367** | **13424** | **24.69** | **57162** | **14148** | **24.75** |

மேலே காட்டப்பட்டுள்ள விடயங்களின் படி சுற்றிவளைத்தல் குற்றங்களை தீர்த்துவைத்தல் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டன.

## 5.9 வங்கிக் கணக்குகளை செயற்படுத்துவதிலுள்ள குறைபாடுகள்

### சீராக்கப்பட வேண்டிய மீதிகள்

பொலிஸ் திணைக்களத்தினால் 2012 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த 48 பிரிவுகளின் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த சீராக்கல்கள் மீதான பகுப்பாய்வின் படி வெளிப்பட்ட தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சீராக்கல் தொடர்பான விபரம் | 6 மாத்திற்கு மேல் 01 ஆண்டிற்கு குறைந்த | 01 ஆண்டிற்கு மேற்பட்ட 03 ஆண்டுகளிற்கு குறைந்த | 03 ஆண்டுகளிற்கு மேற்பட்ட | மொத்தம் |
|---|---|---|---|---|
| | காலப்பகுப்பாவு | | | |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| தேறாத வைப்புக்கள் | 19,886 | - | 15,000 | 34, 886 |
| வழங்கப்பட்டிருந்த ஆனால் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் | 165,228 | 263,745 | - | 428,973 |
| இனங்காணப்படாத வரவு வைத்தல் | 8,108 | - | - | 8,108 |
| இனங்காணப்படாத செலவு வைத்தல் | 93,324 | - | - | 93,324 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செல்லுபடியாகும் காலம் கடந்த வழங்கப்பட்டிருந்த போதிலும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 428,973 பெறுமதியான காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தேறாத காசோலைகளினுள் உள்ள 06 மாதங்களைக் கடந்த ரூபா 34,886 ஆன வைப்புச்செய்யப்பட்டும் தோறாதுள்ளமை தொடர்பில் பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) இனங்காணப்படாதுள்ள ரூபா 8,108 ஆன வரவு மீதிகள் மற்றும் இனங்காணப்படாத ரூபா 93,324 செலவு வைத்தல்களை இனங்கண்டு கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.10 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்ட முறையற்ற தன்மையிலான சில கொடுக்கல் வாங்கல்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

(அ) கொள்வனவு வழிகாட்டல்கள் நடைமுறைகளிலிருந்து விலகுதல்

அரசாங்க வழிகாட்டல்கள் கோவையின் 3.4 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் நீண்ட காலமாக கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்த 16 காற்றுச் சீராக்கி இயந்திரங்கள் (அதில் 10 காற்றுச்சீராக்கி இயந்திரங்கள் 2011 ஆம் ஆண்டில் கோரப்பட்டிருந்தன.)

போட்டி விலைகளின் கீழ் கொள்வனவு செய்யப்படாது சந்தை விலை ஒப்பீட்டு முறையினைப் பயன்படுத்தி ரூபா 2,183,151 இற்கு கொள்வனவு வெய்யப்பட்டிருந்தன.

(ஆ) பொது ஒப்பந்தங்கள்

(i) 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் அதிகாரச்சட்டத்தின் படி ஒப்பந்தகாரர்கள் நடவடிக்கை எடுத்திராமை

குறித்த அதிகாரச்சட்டத்தின் 6(1)(அ) உப பிரிவின் படி ஒப்பந்த உடன்படிக்கையின் கிரயம் ரூபா ஐம்பது இலட்சத்தினை அதிகரிக்கும் சந்தர்ப்பங்களில் ஒவ்வொரு ஒப்பந்தகாரரும் அல்லது அந்த ஒப்பந்தகாரருக்கான இணைப்பிரதிநிதி, உப பிரதிநிதி, பிரதிநிதி இல்லையாயின் பெயர் குறிப்பிடப்பட்ட ஒருவராக செயற்படுகின்ற ஒவ்வொரு ஆளும் ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட திகிதியிலிருந்து 60 நாட்களினுள் ஒப்பந்த உடன்படிக்கையினை பதிவுசெய்ய வேண்டிய போதிலும், 47 பொது ஒப்பந்தங்கள் வழங்கப்பட்ட கம்பனிகள் அதன்படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) பொது ஒப்பந்த உடன்படிக்கையின் படி பதிவுசெய்யப்பட்டமைக்கான செல்லுபடியான சான்றிதழின்றி ரூபா 1,257,818,195 தொகையான 47 ஒப்பந்தங்களுடன் தொடர்புடைய ஒப்பந்தகாரர்களுடன் கொள்வனவு மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வுச் சபை உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்துள்ளமை

பொது ஒப்பந்தங்கள் அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் படி அதிகாரச்சட்டத்தின் 08 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்களினால் இந்த அதிகாரச்சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பதிவுசெய்யப்பட்ட செல்லுபடியான சான்றிதழ் முதலாவதாக தமக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலன்றி பொதுச் சபையொன்றில் அச் சபையின் தொழில்நுட்ப சபை, கொள்வனவுச் சபை அல்லது மதிப்பீட்டுச் சபையொன்றின் யாரேனும் உறுப்பினர் ஒருவரினால் அல்லது அதிலுள்ள யாரேனும் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரினால் அல்லது பதிவாளரினால் பதிவுசெய்யப்படுகின்ற கருமம் தவிர்ந்த ஏதேனும் பொது ஒப்பந்த உடன்படிக்கையிலிருந்து எழுகின்ற அல்லது அவ்வாறான ஒப்பந்த உடன்படிக்கையுடன் தொடர்புடைய ஏதேனுமோர் விடயம் தொடர்பில் 08 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள எவருடனேனும் எவ்வித நடவடிக்கைகளையும் பேனாதிருக்க வேண்டிய போதிலும், செல்லுபடியான பதிவுசெய்யப்பட்ட சான்றிதழொன்று இல்லாத ஒப்பந்தகாரருடன் கொள்வனவுச் சபையினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுச்சபையினதும் உத்தியோகத்தர்கள்

நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். மேற்குறிப்பிட்டவாறு நடவடிக்கை மேற்கொண்டிருந்தமையால் அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் படி அந்த உத்தியோகத்தர்களினால் தண்டனைக்குரிய குற்றமொன்று புரியப்பட்டிருந்தது.

### 5.11 உள்ளகக் கட்டுப்பாடு

நான்கு மாடிகளைக் கொண்ட பிரதான பொலிஸ்மா அதிபர் களஞ்சியத்தில் உயர் பெறுமதியுடைய பல்வேறு களஞ்சியப் பொருட்கள் காணப்படுவதுடன் களஞ்சியப் பொறுப்பாளரிடம் சகல பொறுப்புக்களும் ஒப்படைக்கப்பட்டிருந்தன. இதன் காரணமாக தவறுகளும் மோசடிகளும் இடம்பெறுவதற்கான வாய்ப்பினை புறக்கணிக்க முடியாதிருந்ததுடன் பொருட்களை கையேற்றல், வழங்குதல் மற்றும் பதிவுசெய்தல் தனியொரு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படுவதனால் பிரதான பொலிஸ்மா அதிபர் களஞ்சியத்தில் உள்ளக கட்டுப்பாடு பலவீனமான நிலையில் இருந்தது.

### 5.12 முகாமைத்துவ பலவீனங்கள்

2012 செப்தெம்பர் 03 ஆந் திகதி இடம்பெற்ற 146 ஆவது பொலிஸ் தினத்தன்று ரூபா 3,360,000 செலவில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்ட பொலிஸ் மா அதிபருக்கு முறைப்பாடொன்றை அல்லது தகவலொன்றை வழங்கும் குறுஞ் செய்திச் சேவை 2013 ஏப்ரல் 30 ஆந் திகதியளவிலும் செயற்படு நிலையில் காணப்படவில்லை. இச் சேவையினை பயனுள்ள கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக் கொள்வது தொடர்பில் உயர்மட்ட முகாமைத்துவம் விசேட கவனம் செலுத்தியிருக்காமை அவதானிக்கப்பட்டது.

‘‘பொலிஸ் மா அதிபருக்கு அறிவிப்பதற்காக மின்னஞ்சல் முறை முறைப்பாடுகள் செயற்பாட்டு கருமபீடம் தாபிக்கப்பட்டு தற்போது அப் பணிக்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றது.’’ என பொலிஸ் மா அதிபர் இது தொடர்பில் கணக்காய்விற்கு அறிவித்திருந்தார்.

### 5.13 நட்டங்களும் சேதங்களும்

ஒதுக்கீட்டுக் கணக்கில் காட்டப்பட்டிருந்த பதிவழிப்பதற்கு அல்லது கைவிடப்படுவதற்குள்ள நட்டங்கள் தொடர்பான அறிக்கையின் படி ரூபா 25,000 இற்கு மேற்பட்ட ரூபா 416,363,050 தொகையான 855 நட்டச் சம்பவங்கள் காணப்பட்டதுடன் அவற்றை பின்வருமாறு பகுப்பாய்வு செய்ய முடியும்.

காலப்பகுப்பாய்வு

| ரூபா 25,000 இற்கு மேற்பட்ட | 05 – 10 ஆண்டுகளிற்கு இடைப்பட்ட | 10 ஆண்டுகளிற்கு மேற்பட்ட | மொத்தம் |
|---|---|---|---|
| நட்டச் சம்பவங்களின் எண்ணிக்கை | 672 | 183 | 855 |
| பெறுமதி (ரூபா) | 396,721,558 | 19,641,492 | 416,363,050 |

இந்த நட்டங்களையும் சேதங்களையும் பதிவழிப்பதற்கு அல்லது வேறு வழிமுறைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.14 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மேலதிக எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 736 | 515 | 221 | - |
| (ii) | மூன்றாம் மட்டம் | 3,209 | 3,667 | - | 458 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 82,685 | 72,071 | 10,614 | - |
| (iv) | ஆரம்ப மட்டம் | 2,992 | 2,870 | 122 | - |
| (v) | ஏனையோர் | 673 | 673 | - | - |
| | மொத்தம் | 90,295 | 79,796 | 10,957 | 458 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியளவில் 10,957 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்த மேலதிக ஊழியர் எண்ணிக்கை தொடர்பில் முறைப்படியான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தவறவிடப்பட்டிருந்தது.

## 6. தலைப்பு 226 – குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம்

### 6.1 கணக்காய்வின் நோக்கெல்லை

குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம்

உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 யூன் 21 ஆந் திகதி கட்டுப்பாட்டு நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 6.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 6.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று என்பன இவ்வறிக்கையின் (அ) இல் காட்டப்பட்டுள்ள பொது அவதானிப்பு மற்றும் 6.4 இலிருந்து 6.6 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

22601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான் 2012 திசெம்பர் 31 இல் உளள்வாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்தினத்தில் உள்ளவாறு கடனுக்கான தவணைப்பணம் அறவிடப்படாதிருந்த

மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 2,308,474 ஆகும். அதில் ரூபா 345,410 கடன் மீதியினை அறவிட முடியாது போயிருந்தது.

### 6.4 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டுக் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| நிதிப்பிரமாணம் 94 | 3,177,779 | மீளாய்வாண்டின் இறுதியளவில் 5 செலவின விடயங்களுக்குரிய சேமிப்புக்கள் ரூபா 1,314,367 ஆகக் காணப்பட்டிருந்த போதிலும், அச் சேமிப்பினை ரூபா 3,177,779 ஆல் மிகைத்து ரூபா 4,492,146 பொறுப்புக்கள் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்தன. |

### 6.5 முகாமைத்துவ பலவீனங்கள்

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2012 ஆம் ஆண்டில் திணைக்களத்தினால் வீசா இன்றி தங்கியிருந்த 856 நபர்கள் கைது செய்யப்பட்டிருந்த போதிலும், 2012 சனவரி 01 ஆந் திகதி முதல் திசெம்பர் 31 ஆந் திகதி வரை வீசா இன்றி தங்கியிருந்த வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை 11,444 என திணைக்களத்தின் கணனி முறைமைத் தரவுகள் காண்பித்தன.

(ஆ) குடிப்பெயர்வுகளிற்கான இலத்திரணியல் அங்கீகாரமளித்தல் முறைமைக்கான உடன்படிக்கையின் படி இணைய தளத்தின் வடிவமைப்பாளர் இணைய தளத்தில் விளம்பரங்களை செய்ய முடியாதென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், கம்பனியொன்று அந்த இணையதளத்தில் அதனது உத்தியோகபூர்வ இலச்சினையை காட்சிப்படுத்தியிருந்ததுடன் அதற்குரிய கட்டணத்தை அறிவிட்டு அந்த உத்தியோகபூர்வ இலச்சினையை காட்சிப்படுத்துவதற்கான அனுமதியை வழங்குவதைக் கருத்திற் கொள்வதாக கட்டுப்பாட்டு நாயகத்தினால்

அறிவிக்கப்பட்டிருந்தது. உலகம் முழுவதிலும் இலங்கைக்கு குடிபெயர்வதற்காக எதிர்பார்த்துள்ள வெளிநாட்டவர்கள் இந்த இணைய தளத்தினை பயன்படுத்துகின்றமையால் குறித்த நிறுவனம் விலை மதிக்க முடியாத விளம்பரத்தினை இந்த இணைய தளத்தினை பயன்படுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்கின்றமை கவனத்திற்கு கொண்டுவரப்படுவதுடன், 2012 சனவரி 01 முதல் 2013 யூன் 19 ஆந் திகதி வரை பல்வேறு நாடுகளிலுள்ள 1,835,536 நபர்கள் இந்த முறைமையின் ஊடாக வீசாவிற்காக விண்ணப்பித்திருந்தமை திணைக்களத்தின் கணனி முறைமை தரவுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) இரட்டை பிரசாவுரிமை சான்றிதழ் வழங்குதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தது. 2012 மே மாத அமைச்சரவை தீர்மானத்தின் படி புதிய முறையில் இரட்டை பிரசாவுரிமையினை வழங்குவதற்கான திட்டமொன்றை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் பிரேரித்திருந்த போதிலும், அப் பிரேரணை 2014 ஆகஸ்ட் 19 ஆந் திகதி வரை அமுலாக்கப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், 2013 சனவரி முதல் 2013 யூன் 19 ஆந் திகதி வரை 78 இரட்டை பிரசாவுரிமை சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 11,250,000 வருமானம் கிடைத்திருந்தமை திணைக்களத்தின் கணனி முறைமை தரவுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) இலங்கைக்கு வருகை தருகின்ற மாலுமிகளின் குடியகலாச் சந்தர்ப்பங்கள் எழுமாயின் அவர்களை இலங்கையிலிருந்து வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளிற்காக மாலுமிகளின் முகவர்கள் மற்றும் மத்திய வங்கியின் ஆளுனருக்காக குடிவரவு குடியகழ்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளிற்கு உட்பட திணைக்களத்தின் அதிகாரமுடைய உத்தியோகத்தரினால் பிணை முறியொன்றில் கைச்சாத்திடப்படும். அப்பிணை முறியின் பெறுமதிகள் 20 ஆண்டுகளிற்கு மேல் பழமைவாய்ந்ததாகவும் காலத்துக்கேற்ப மாற்றத்துக்குள்ளாகாமலும் இருந்ததால் அது நடைமுறைக்கு பொருத்தமற்றது என்பது அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| நாடு | பெறுமதி |
|---|---|
| | ரூபா |
| மாலைதீவு | 1,000 |
| பாகிஸ்தான்/வங்கால தேசம் | 2,000 |
| ஐரோப்பா/மத்திய கிழக்கு | 4,650 |
| சோசலிச நாடுகள் | 5,925 |
| அமெரிக்க/தென் ஆபிரிக்க நாடுகள் | 6,975 |

வெளிநாட்டு மாலுமியை இலங்கையிலிருந்து வெளியேற்றுவதற்கான சகல செலவுகளையும் குறித்த கப்பல் கம்பனியிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு இயலுமான விதத்தில் பிணைமுறி ஆவணங்கள் தயாரிக்கப்பட வேண்டுமென்பதுடன் உடன்படிக்கை சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை பின்பற்றி சட்டரீதியான உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதிக் கட்டுப்பாட்டாளர் (சட்டம்) இற்கு அறிவுறுத்தல் வழங்கப்படும் என கட்டுப்பாட்டு நாயகத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

(உ) பத்தரமுல்லை அனர்த்த சிகிச்சையளித்தல் நிலையத்தினை நடாத்திச்செல்வதற்காக மலேசிய நிறுவனமொன்றுடன் 2007 ஆகஸ்ட் முதல் 5 ஆண்டுகளிற்காக கைச்சாத்திடப்பட்டிருந்த உடன்படிக்கையின் பேரில் மாதமொன்றிற்கு ரூபா 1,600,000 வாடகையினை செலுத்தவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதன்படி 2007 ஆகஸ்ட் முதல் 2012 திசெம்பர் வரை செலுத்தப்பட்டிருந்த மொத்தத் தொகை ரூபா 94,560,000 ஆக இருந்ததுடன், 2013 சனவரி 31 ஆந் திகதி உடன்படிக்கைக் காலம் முடிவடைந்திருந்தது.

## 6.6 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 60 | 48 | 12 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 391 | 310 | 81 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 408 | 335 | 73 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 137 | 115 | 22 |
| (v) | ஏனையோர் (அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | 02 | 02 | - |
| | மொத்தம் | 998 | 810 | 188 |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

மீளாய்வாண்டின் இறுதியளவில் 188 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 7. தலைப்பு 227 – ஆட்பதிவுத் திணைக்களம்

### 7.1 கணக்காய்வின் நோக்கெல்லை.

ஆட்பதிவுத் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்க கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 யூன் 20 ஆந் திகதி ஆணையாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குகிடைக்கப் பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 7.2 கணக்குகள் மற்றும் இணக்க கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்த மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 7.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (ஆ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 7.4 இலிருந்து 7.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு

அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) பாதீட்டு முரண்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இரண்டு செலவின விடயத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 550,000 தொகையான நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) ஆறு செலவு விடயங்களுக்கு கூடுதலாக ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது தொடர்புடைய தேறிய ஏற்பாட்டின் 50 சதவீதத்திற்கும் 80 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. பதவியணியில் வெற்றிடங்கள் காணப்படுகின்றமையால் உபசார மற்றும் சீருடைகளும், சிவில் பாதுகாப்பு சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் சேவை கிடைக்கின்றமையால் மேலதிகநேர மற்றும் விடுமுறைகாலப் படிகளும், ஏற்பாடுகள் நிறுத்தி வைக்கப்பட்டமையால் இயந்திரங்கள்,இயந்திர உபகரணங்கள் மற்றும் பயிற்சியளித்தல் ஆற்றல் அதிகரிப்பு போன்ற செலவின விடயங்களில் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்ததாக ஆணையாளர் நாயகத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

22701 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 2,257,592 கூட்டுமொத்தமாக இருந்தது. அதில் ரூபா 792,750 தொகை 2013 யூலை 31 ஆந் திகதியளவில் அறவிடப்பட்டுள்ளதாகவும் ரூபா 1,069,668 தொகை மாதாந்த தவணைக்கட்டணமாக அறவிடப்பட்டு வரப்படுவதாகவும் தற்போது அறவிடப்படுவதற்குள்ள மீதி ரூபா 395,174 மாத்திரமேயாகும் என்றும் அதற்குப் பதிலளித்த ஆணையாளர் நாயகத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

## 7.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 7.4.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவன தலைவர்களிற்கு முகவரியிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம்

ஆண்டிலிருந்து குறைந்தது அடுத்துவரும் 03 ஆண்டுகளிற்காக கூட்டிணைந்த திட்டமொன்று திணைக்களத்தால் வருடத்தின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 2012 முதல் 2014 வரையான காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்டிருந்த கூட்டிணைந்த திட்டம் 2013 யூலை 09 ஆந் திகதி வரை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 7.4.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருந்த போதிலும், போதியளவில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 7.5 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டுக் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கோவை | | |
| நிதிப்பிரமாணம் 94 | 2,197,995 | ஐந்து செலவின விடயங்களிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாடுகளைப் பணன்படுத்திய பின்னர் சேமிப்புக்கள் ரூபா 67,059 ஆகக் காணப்பட்டிருந்த போதிலும், அச் சேமிப்பினை ரூபா 2,197,995 ஆல் மிகைத்து ரூபா 2,265,054 கூட்டுத் தொகையுடைய பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தன. |
| (ஆ) திறைசேரிச் சுற்றறிக்கை | | |
| 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க சுற்றறிக்கை | | கணனிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய உப பாகங்களிற்காக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 7.6 செயற்திட்டங்களை செயற்படுத்துவதிலுள்ள குறைபாடுகள்

### செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

திணைக்களத்தினால் கீழே குறிப்பிடப்பட்ட செயற்திட்டத்தினை நிறைவேற்றுவதில் தாமதம் அவதானிக்கப்பட்டது.

இலத்திரணியல் அடையாள அட்டை செயற்திட்டத்திற்காக 2007 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டு வரை ரூபா 728.3 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டு அக்காலப்பகுதியினுள் ரூபா 314.2 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டத்தினை செயற்பாட்டு நிலைக்கு கொண்டுவருவதற்கு முடியாது போயிருந்தது. மீண்டும் 2011 ஆகஸ்ட் 17 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் படி இலத்திரணியல் அடையாள அட்டை வழங்குதற்கும் இலத்திரணியல் தரவுக் களஞ்சியத்தினை தாபிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதற்காக ரூபா 1,200 மில்லியன் நிதி ஏற்பாடு 2012 ஆம் ஆண்டிற்காக செய்யப்பட்டிருந்த போதிலும், 2012 ஆம் ஆண்டில் அதற்காக ரூபா 44.9 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. இலத்திரணியல் தரவுக் களஞ்சியத்தினை தாபிப்பதற்காக 2013 யூன் மாதம் விலைமனுக்கள் கோரப்பட்டிருந்ததுடன் தரவுகளைச் சேகரித்தல் நடவடிக்கைகளை 2013 ஆம் ஆண்டில் பூரணப்படுத்தவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக ஆணையாளர் நாயகத்தினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

## 7.7 செயலாற்றல்

### நோக்கத்திற்கு முரணான செயற்பாடுகள்

திணைக்களம் தனது நோக்கங்களிற்குரிய கருமங்களிலிருந்து விலகிச் செயற்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் தெரிவுப் பரிசோதனைகளில் அவ்வாறு வெளிப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

ஆளொருவரின் அடையாளத்தினை உறுதிப்படுத்தவதற்காக காணப்படுகின்ற பிரதான ஆவணமாகிய தேசிய அடையாள அட்டைகளைத் தயாரிப்பதற்காக மீளாய்வாண்டில் 900,751 விண்ணப்பங்கள் கிடைத்திருந்ததுடன் 781,922 அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டிருந்தன. பழைய மற்றும் அண்மைக் காலத்தில் விநியோகிக்கப்பட்ட அடையாள அட்டை இலக்கங்களின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும், நாளொன்றிற்கு அதிக எண்ணிக்கையான விண்ணப்பதாரிகள் வருகை தருவதனாலும், 2012 ஆம் ஆண்டில் இலக்கங்களை விநியோகித்தல் தவறுகள் தொடர்பில் ஏறத்தாழ 1 சதவீதமான விண்ணப்பங்களை தெரிவுப் பரிசோதனை செய்ததில் அவ்வாறான 52 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. விநியோகிக்கப்படுகின்ற அடையாள அட்டைகளின் இலக்கங்கள் தொடர்பில் சரியான பின்தொடர் நடவடிக்கைகளோ அல்லது பரிசோதனையோ மேற்கொள்ளப்படாமை இவ்வாறாக இலக்கங்கள் தவறியமைக்கு காரணமாகியிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அவ்வாறான நிகழ்வுகளின் தன்மை கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

(அ) பிறந்த திகதியுடன் இணங்காத இலக்கங்கள் விநியோகிக்கப்பட்டிருந்தமை.

(ஆ) பெண்ணா அல்லது ஆணா என்பதனை இனங்காணக்கூடிய விதத்தில் அடையாள அட்டை இலக்கங்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்காமை.

(இ) பிறந்த ஆண்டு, சில ஆண்டுகள் குறைத்தோ அல்லது கூட்டியோ குறிப்பிடப்பட்டிருந்தமை

(ஈ) ஒரே இலக்கம் இருவருக்கு வழங்கப்பட்டிருந்தமை

(உ) தவறுகளுடன் கூடிய இலக்கங்கள் வழங்கப்பட்டிருந்தமை

(ஊ) செல்லுபடியற்ற இலக்கங்கள் வழங்கப்பட்டிருந்தமை

கணனி முறைமையில் உள்ளடக்குவதன் ஊடாக தவறான இலக்கங்களைக் கொண்ட அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படுவதனை தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டுள்ளதாகவும், இலத்திரணியல் தேசிய அடையாள அட்டை செயற்திட்டத்தின் கீழ் எதிர்காலத்தில் அடையாள அட்டைகள் வழங்குதல் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இத்தவறுகள் முழுமையாக இல்லாதொழியும் எனவும் ஆணையாளர் நாயகத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

## 7.8 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 19 | 14 | 05 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 04 | 01 | 03 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 368 | 253 | 115 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 139 | 132 | 07 |
| | மொத்தம் | 530 | 400 | 130 |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

மீளாய்வாண்டின் இறுதியளவில் 130 வெற்றிடங்களை நிரப்புவதற்கு தவறியிருந்தது. வெற்றிடங்களை பூரணப்படுத்துமாறு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சிடம் கோரிக்கை விடுவிக்கப்பட்டுள்ளதாக ஆணையாளர் நாயகத்தினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

## 8. தலைப்பு 291 – கரையோரம் பேணல் திணைக்களம்

### 8.1 கணக்காய்வின் நோக்கெல்லை

கரையோரம் பேணல் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 செப்தெம்பர் 13 ஆந் திகதி திணைக்களத் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 8.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 8.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் கரையோரம் பேணல் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (எ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 8.4 இலிருந்து 8.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு

அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) பதிவேடுகளைப் பேணியிருக்காமை**

கரையோரம் பேணல் திக்களத்தினால் கீழே காட்டப்பட்டள்ள பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணிவரப்பட்டிருக்காமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டின் வகை | தொடர்புடைய பிரமாணம் | அவதானிப்பு |
|---|---|---|
| வாக்குப்பணப் பேரேடு | நிதிப்பிரமாணம் 447 | சமப்படுத்தி முறையாக பேணப்பட்டிருக்கவில்லை. |
| இழப்புக்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 | நாளதுவரையாக பேணிவரப்பட்டிருக்கவில்லை. |
| வைப்புக்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 414 | நாளதுவரையாக பேணிவரப்பட்டிருக்கவில்லை. |
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

**(ஆ) பாதீட்டு முரண்**

கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்கள் செலவின விடயத்தின் கீழ் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ரூபா 715,000,000 ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த ஏற்பாட்டிலிருந்து ரூபா 75,400,000 தொகை நிதிப்பிரமாணம் 66 இன் ஊடாக வேறு செலவின விடயங்களிற்கு மாற்றப்பட்டிருந்தது. அதன்படி தேறிய ஏற்பாடான ரூபா 639,600,000 ஏற்பாட்டிலிருந்து மீளாய்வாண்டிற்குரிய ரூபா 514,901,641 மற்றும் முன்னைய ஆண்டுகளிற்குரிய ரூபா 20,713,970 பொறுப்புக்களைத் தீர்ப்பதற்காக பயன்படுத்திய பின்னர் ரூபா 103,984,389 ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அதன்படி அந்த செலவின விடயத்தில் ரூபா 158,670,319 ஏற்பாடு மாற்றப்பட்டும் சேமிக்கப்பட்டும் இருந்தமையால் கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்கள் செலவின விடயத்திற்காக பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் மிகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

**(இ) செலவினம் மீதான கட்டுப்பாடு**

நிதிப்பிரமாணம் 94 இற்கு முரணாக 08 செலவின விடயத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாடுகளிலிருந்து ஆண்டின் இறுதியிலான சேமிப்புக்களை ரூபா 159,933 இனால் மிகைத்து ரூபா 1,835,753 கூட்டுத்தொகையான பொறுப்புக்கள் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்தன.

**(ஈ) கட்டுநிதிக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் கரையோரம் பேணல் திணைக்களத்தின் கட்டுநிதிக் கணக்கில் காணப்பட்ட ரூபா 378,713 வரவு மீதி 2013 யூலை 31 ஆந் திகதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ii) காலி மேற்கு கடற்கரையோர அபிவிருத்திச் செயற்திட்டத்திற்காக இலங்கை கடற்படைக்கு முறையற்ற விதத்தில் வழங்கப்பட்டிருந்த ரூபா 3,000,000 முற்பணத் தொகையிலிருந்து இது வரை தீர்க்கப்படாதிருந்த மீதி ரூபா 378,713 ஆகக் காணப்பட்டது.

**(உ) பொது வைப்புக் கணக்கு**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது வைப்புக் கணக்கின் மீதி 33,765,148 ஆக இருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதிப்பிரமாணம் 565(5) இன் பிரகாரம் ஒவ்வொரு மாதத்திற்காகவும் படிவம் பொது 71 படி, மாதாந்த வைப்புப் பொழிப்புக் கூற்று தயாரிக்கப்பட்டு தொடர்ந்துவரும் மாதம் முடிவடைதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) இரண்டு ஆண்டுகளைக் கடந்திருந்த ரூபா 10,658,843 தொகையான உரிமை கோரப்படாத காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பதவி வறிதாக்கப்பட்ட 03 ஊழியர்களினதும் செயற்திட்டமொன்றிற்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்த ஊழியர் ஒருவரினதும் 2012 திசெம்பர் 31 இல்

உள்ளவாறான நிலுவைக் கடன் மீதி ரூபா 519,859 மொத்தமாக காணப்பட்டது. அம் மீதிகள் 03 முதல் 10 ஆண்டுகளாக நிலவி வருவதுடன் 2013 யூலை 31 ஆந் திகதியளவிலேனும் அம் மீதியை அறவிடுவதற்கு தவறியிருந்தது.

(ii) 1994 ஆகஸ்ட் 10 ஆந் திகதிய 96 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக் கணக்கிற்கும் தனிப்பட்டோர் மீதிகளின் வகைப்படுத்தல் பொழிப்பின் மீதிக்குமிடையே காணப்பட்ட ரூபா 1,902 வேறுபாடு கணக்கிணக்கம் செய்யப்பட்டு தீர்வுசெய்யப்படாதிருந்ததுடன் வேறுபாட்டிற்கான காரணம் விளக்கப்பட்டிருக்கவுமில்லை.

## 8.4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 8.4.1 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான கொள்வனவுத் திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 8.4.2 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்படாதிருந்ததுடன் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கவில்லை.

### 8.4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினை செயற்படுத்தல்

மீளாய்வாண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 8.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

**(அ) பயன்படுத்தாத மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

கீழே பகுப்பாய்வுசெய்யப்பட்டவாறு சில சொத்துக்கள் பயன்படுத்தாதும் குறைப்பயன்பாடுடையதுமாக காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது.

| சொத்துக்கள் வகை | அலகுகளின் எண்ணிக்கை | பயன்படுத்தாதும் குறைப்பயன்பாடுடையதுமாக இருந்த காலம் |
|---|---|---|
| (i) வாகனங்கள் | 02 | 04 ஆண்டுகளிற்கும் மேலாக |
| (ii) இயந்திராதிகள் | 02 | 04 ஆண்டுகளிற்கும் மேலாக |

| | | |
|---|---|---|
| (iii) பாவனையிலிருந்து அகற்றப்பட்ட வாகனங்கள் | 06 | 05 ஆண்டுகளிற்கும் மேலாக |
| (iv) பாவனையிலிருந்து அகற்றப்பட்ட இயந்திரங்கள் | 01 | 05 ஆண்டுகளிற்கும் மேலாக |

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்தல்**

நிதிப்பிரமாணம் 756 மற்றும் 2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎவ்/மெய்மையாய்வு/01 ஆம் இலக்க பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்தப் பொருள் மெய்மையாய்வினை மேற்கொண்டு அந்த அறிக்கையினை 2013 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் 2012 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2013 யூன் 13 ஆந் திகதியன்றே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**(இ) வெளித்தரப்பினர்களிற்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

கரையோரம் பேணல் திணைக்களத்திற்குச் சொந்தமான ரூபா 711,000 பெறுமதியான வாகனமொன்று முறையற்ற விதத்தில் முன்னாள் அமைச்சரொருவரின் இணைப்புச் செயலாளருக்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

**(ஈ) திர்க்கப்படாத பொறுப்புக்கள்**

கரையோரம் பேணல் திணைக்களத்தினால் 2012 திசெம்பர் 31 இல் தீர்க்கப்படாது காணப்படும் பொறுப்புக்களின் மீதி ரூபா 28,330,617 மொத்தமாக காணப்பட்டதுடன் அந்த பொறுப்புக்கள் 01 ஆண்டிற்கும் குறைவான காலத்திலிருந்து நிலவி வந்திருந்தன.

**8.6 செயலாற்றல்**

2012 ஆம் ஆண்டின் வருடாந்த மதிப்பீடு / செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி கரையோரம் பேணல் திணைக்களத்தின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான செயற்பாடுகள்

சில பிரதான செயற்பாடுகள் முழுமையாக நிறைவேற்றப்படாது அல்லது போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) கடலோரப் பாதுகாப்பு வியூகங்கள் புதிய நிர்மாணங்களின் நிலைமை பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| நிர்மாணச் செயற்திட்டம் | நிதிஏற்பாடு | பயன்படுத்தல் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிர்மாணங்களின் நிலைமை |
|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| ❖ அம்பலன்கொட – படபெந்திமுல்ல 250 மீற்றர் நீளமான கிரொய்ன | 10.00 | 5.57 | நிர்மாணம் ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன் நிர்மாணப் பொருட்களை கொள்வனவு செய்தல் மாத்திரம் நிறைவேற்றப் பட்டிருந்தது |
| ❖ மாரவில – தூவவத்த – 200 மீற்றர் நீளமான ரிவட்மென்ட் மதகு | 6.50 | 5.22 | |
| ❖ தலவில 60 மீற்றர் நீளமான கிரொய்ன | 10.00 | 4.17 | |
| ❖ உனவடுன - 250 மீற்றர் நீளமான நீரூற்று | 55.00 | 12.99 | |
| ❖ திக்வெல்ல -இகிரிதுடுவ 100 மீற்றர் நீளமான நீரூற்று | 10.00 | 2.77 | நிர்மாணம் ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன் சிறியளவில் நிர்மாணப் பொருட்கள் கொள்வனவு மாத்திரம் இடம்பெற்றிருந்தது. |
| ❖ மாரவில – தலவில 60 மீற்றர் நீளமான 03 நீரூற்றுக்கள் | 120.00 | 51.00 | 2012 ஆகஸ்ட் 27 ஆந் திகதியளவில் பூரணப்படுத்துவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், ரூபா 51 மில்லியன் தொகைக்கு நிர்மாணங்கள் செய்யப்பட்ட பின்னர் ஒப்பந்தக் கம்பனி நிர்மாணத்தை கைவிட்டிருந்தது. ஆகையால் வேலைகளின் ஆரம்பத்தில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 21.51 மில்லியன் முற்பணத் தொகையில் ரூபா 10.26 மில்லியன் தொகை இன்னும் அறவிடப்பட வேண்டியிருந்தது. |
| ❖ மாரவில – தலவில 60 மீற்றர் நீளமான 02 நீரூற்றுக்கள் | 60.00 | 38.15 | 2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், 01 நீரூற்று மாத்திரம் நிர்மாணித்து பூரணப்படுத்தப்பட்டிருந்தது. அதன் நுழைவு மதகு அகற்றப்பட்டு வேலை பூரணப்படுத்தப் பட்டிருக்கவில்லை. |

(ii) கடலோர மணல் வளப்படுத்தல் செயற்திட்டங்களின் நிலைமை கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

- மாரவில – தலவில கடலோர மணல் வளப்படுத்தல் செயற்திட்டத்திற்காக ரூபா 350 மில்லியன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. அந்த ஏற்பாட்டிலிருந்து ரூபா 311.98 மில்லியன் தொகையினை பயன்படுத்தி அந்த விசேட செயற்திட்டத்தின் கீழ் உஸ்வெடகெய்யாவ கடலோர மணல் வளப்படுத்தல் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்தது.
- வெள்ளவத்த கடலோரத்தினை கட்டியெழுப்புவதற்கான கடலோர மணல் வளப்படுத்தல் செயற்திட்டத்தினை செயற்படுத்துவதற்காக ரூபா 7 மில்லியன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் அது செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. அந்த ஏற்பாட்டிலிருந்து ரூபா 1.08 மில்லியன் தொகையினைப் பயன்படுத்தி திணைக்களத்தின் மீண்டெழும் செலவினங்கள் செய்யப்பட்டிருந்தன.

(iii) கடலோர பூங்காக்களை நிர்மாணித்தல் மற்றும் நடைபாதை வீதிகளை நிர்மாணித்தல் நிலைமை கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

- மாத்தறை கடலோர பூங்காவின் நிர்மாணம் 2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் முதலாம் மற்றும் இரண்டாம் கட்டங்களை நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டில் மேலும் ரூபா 16 மில்லியன் ஏற்பாடு செய்துகொள்ளப்பட்டிருந்தது. அந்த ஏற்பாட்டிலிருந்து ரூபா 13 மில்லியன் முதலாம் கட்ட நிர்மாணத்திற்காக செலவிடப்பட்டிருந்தது.
- நிதி ஏற்பாடு ரூபா 13 மில்லியனாகக் காணப்பட்ட வெல்லமடம கடலோரப் பூங்காவின் நிர்மாண நடவடிக்கைகளை பூரணப்படுத்துவதற்காக ரூபா 13 மில்லியன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், அக்கருமம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டில் அந்த ஏற்பாட்டிலிருந்து ரூபா 4.25 மில்லியன் செலவிடப்பட்டு கழிவுக் கால்வாய் முறையினையும் மதகினையும் நிர்மாணித்தல் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.
- காலி மேற்கு கடலோரத்தில் 450 மீற்றர் நடைபாதையை நிர்மாணித்தல், 100 மீற்றர் கடலோர பூங்காவினை அலங்கரித்தல் மற்றும் மின்சார அலங்கரித்தல்கள் 2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் அதனைப் பூரணப்படுத்துவதற்காக மீளாய்வாண்டில் ரூபா 10 மில்லியன் ஏற்பாடு செய்யப்பட்டுமிருந்த

போதிலும், 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அக்கருமம் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) கரையோர வலய கடற்கரை வளங்கள் முகாமைத்துவ திட்டத்தினை அமுல்படுத்தல் நிலமை கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

- 2011 இன் 49 ஆம் இலக்க கடலோர பாதுகாப்பு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் 5(9) ஆம் பிரிவின் படி 2006 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டிருந்த கரையோர வலய கடற்கரை வளங்கள் முகாமைத்துவ திட்டம் 05 ஆண்டுகள் கடப்பதற்கு முன்னர் மறுசீரமைக்கப்பட வேண்டியிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை அதற்காக 07 ஆண்டுகள் முடிவடைந்திருந்த போதிலும், மீளாய்விற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.
- அனுமதியின்றிய நிர்மாணங்களை பரிசோதித்து அனுமதியற்ற நிர்மாணங்களை உடைத்து அகற்றும் 155 கட்டளைகள் மீளாய்வாண்டில் வழங்கப்பட்டிருந்த போதிலும், அவற்றில் 24 அனுமதியற்ற நிர்மாணங்கள் அல்லது 15 சதவீதமானவை மாத்திரம் உடைத்து அகற்றப்பட்டிருந்தன. முன்னைய ஆண்டில் வழங்கப்பட்ட அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுவதற்கான 388 கட்டளைகளில் 275 நிர்மாணங்கள் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உடைத்து அகற்றப்பட்டிருந்தன.
- தீவடங்கிலுமான கடலோர நுழைவுகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளை அமுல்படுத்தவதற்காக ரூபா 2 மில்லியன் ஏற்பாட்டினை மேற்கொண்டு திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், காலி, புத்தளம் கரையோர வலய நுழைவு வீதிகளை இனங்கண்டு கொள்வதற்கான ஆய்வு நடவடிக்கைகள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தன. இருப்பினும், அந்த ஏற்பாடு அனுமதியற்ற நிர்மாணங்களின் பரிசோதனைக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.
- தீவின் ஒட்டுமொத்த கரையோர வலயங்களிற்கு அண்மித்த பகுதிகளில் பசுமை பயிர்ச்செய்கையினை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டு ரூபா 2 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த ஏற்பாட்டிலிருந்து ரூபா 753,870 செலவிடப்பட்டு வெள்ளவத்தை, மொறட்டுவ மற்றும் உஸ்வெடகெய்யாவ கடலோர பிரதேசங்களில் 06 கிலோமீற்றர்கள் பசுமை பயிரிடல்கள் தாபிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், நடப்பட்ட மரக்கன்றுகளை அந்த கரையோர

வலயங்களில் காணமுடியவில்லை. இதற்காக ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த ரூபா 1,256,130 தொகை அனுமதியற்ற நிர்மாணங்களை பரிசோதிப்பதற்காக செலவிடப்பட்டிருந்தது.

(v) தேசிய கரையோர பணிகளை அமுல்படுத்துவதற்காக பரிசோதனைகள் மற்றும் அவதானித்தல்கள் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் தரவு சேகரித்தல் நடவடிக்கை பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**8.7 வங்கிக் கணக்குகள்**

அறவிடப்பட்டிருந்த ரூபா 30,000 அரசாங்க கட்டணத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த தனியார் காசோலைக்கு கொடுப்பனவு மறுக்கப்பட்டிருந்த போதிலும், அத் தொகை 2013 மே 10 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. நிதிப்பிரமாணம் 169(2) இலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக திணைக்களத்தினால் தனியார் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட காசோலை தேறப்படுவதற்கு முன்னர் சேவைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை இதற்குக் காரணமாகியிருந்தது.

**8.8 சேதங்கள் மற்றும் இழப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்கின் டீஜீஎஸ்ஏ 8 படிவத்தில் கீழான இழப்புக்கள் கூற்றில் சேதங்கள், இழப்புக்கள் எதுவும் இல்லையென அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2009 ஆம் ஆண்டிலும் 2012 ஆம் ஆண்டிலும் 02 மோட்டார் வாகன விபத்துக்களினால் ரூபா 600,000 மற்றும் 2011 ஆம் ஆண்டில் எக்ஸ்கவேடர் இயந்திர விபத்தினால் ரூபா 442,358 ஆக மொத்தம் ரூபா 1,042,358 மதிப்பீடு செய்யப்பட்ட சேத இழப்பு ஏற்பட்டிருந்தது. நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் அந்த சேத இழப்புக்கள் அறிவிக்கப்பட்டு, நிதிப்பிரமாணம் 109 இலிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொண்டு நட்டத்தினை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு அல்லது புதத்கங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**8.9 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 37 | 17 | 20 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 03 | 01 | 02 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 334 | 248 | 86 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 176 | 79 | 97 |
| | மொத்தம் | 550 | 345 | 205 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

திணைக்களத்தின் 205 வெற்றிடங்களை நிரப்புவதற்காக நிதிப்பிரமாணம் 71 இன் பிரகாரம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

## 8.10 உள்ளகக் கட்டுப்பாடு

### உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்காததுடன் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 9. தலைப்பு 320 – சிவில் பாதுகாப்புத் திணைக்களம்

### 9.1 கணக்காய்வின் நோக்கெல்லை

சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 ஆகஸ்ட் 15 ஆந் திகதி பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 9.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 9.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (ஆ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 9.4 இலிருந்து 9.7 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு

அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) ஏடுகள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிருக்காமை**

(i) சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தினால் கீழே காட்டப்பட்டுள்ள பதிவேடுகள் பேணிவரப்பட்டிருக்காமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டின் வகை | தொடர்புடைய பிரமாணம் |
|---|---|
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 டிசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| கணனி துணைச்சாதனங்கள் மற்றும் மென்பாகங்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

(ii) திணைக்களத்திற்கு மீளாய்வாண்டில் சமர்ப்பிக்கப்பட்ட மூன்று கணக்காய்வு ஐய வினாக்களிற்கும் முன்னைய ஆண்டில் வழங்கப்பட்ட ஒரு கணக்காய்வு ஐய வினாவிற்கும் 2013 மார்ச் 31 ஆந் திகதி வரை பதிலளிக்கப்படாதிருந்ததுடன் அந்த ஐய வினாக்கள் தொடர்பில் கணிப்பிடக்கூடியதாகவிருந்த கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதி ரூபா 7,012,992 ஆகும்.

**(ஆ) பொது வைப்புக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இரண்டு வருடத்திற்கும் மேற்பட்ட ரூபா 8,736,188 மொத்தமான வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2012 ஆம் ஆண்டில் உழைக்கப்பட்ட ரூபா 38,423,787 வருமான வைப்புக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

**9.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**9.4.1 கூட்டிணைந்த திட்டம்**

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவன தலைவர்களிற்கு முகவரியிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து குறைந்தது அடுத்துவரும் 03 ஆண்டுகளிற்காக கூட்டிணைந்த திட்டமொன்று சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தினால் வருடத்தின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத் திட்டம் 2012 திசெம்பர் 31 வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**9.4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

மேற்படி 9.4.1 இல் குறிப்பிடப்பட்ட அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்திற்கமைய திணைக்களத்தினால் 2010 ஆம் அண்டிலிருந்து தொடர்ந்துவரும் ஆண்டுகளிற்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டமொன்று 2012 திசெம்பர் 31 வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**9.4.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

மேற்படி 9.4.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட 2002 செப்தம்பர் 12 மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கைகளின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் அமைச்சினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியொன்றுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை 2013 யூன் 20 ஆந் திகதி வரை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

**9.4.4 வருடாந்த கொள்வனவுத் திட்டம்**

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2012 திசெம்பர் 31 வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**9.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்தல்**

2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎவ்/மெய்மையாய்வு/01 ஆம் இலக்க பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையினால் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந்

திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்தப் பொருள் மெய்மையாய்வினை மேற்கொண்டு அந்த அறிக்கையினை 2013 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் அந்த அறிக்கை 2013 மே 31 ஆந் திகதியளவிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

(i) திணைக்களத்தினால் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாதிருந்த ரூபா 113,771,016 பொறுப்புக்களிற்காக பிணைப்புக்கள் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அத் தொகை 01 ஆண்டிற்கும் குறைவான காலத்திலிருந்து காணப்பட்டது.

(ii) நிதிப்பிரமாணம் 94 இற்கு முரணாக 19 செலவின விடயங்களிற்குரிய நிதி ஏற்பாடுகளை மிகைத்து ரூபா 102,819,127 மொத்தமான பொறுப்புக்கள் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்தன.

## 9.6 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் கோவை | | |
| (i) நிதிப்பிரமாணம் 115(4) | 387,502 | முன்னைய நிதியாண்டுக்கு முன்னரான நிதியாண்டுக்குரிய சகல பணக் கோரிக்கைகளின் கொடுப்பனவை மேற்கொள்ள முன்னர் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | நிதிப்பிரமாணம் 855 | 675,985 | அரசாங்க திணைக்களத்திற்குத் தேவையான செய்திப் பத்திரிகைகளைக் கொள்வனவு செய்வதற்கான தேவையினை செயலாளருக்குச் சமர்ப்பித்து அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

### 9.7 வங்கிக் கணக்குகளை செயற்படுத்துவதிலுள்ள குறைபாடுகள்

திணைக்களத்தினால் பொதுத் திறைசேரியின் அங்கீகாரமின்றி நடைமுறைக் கணக்கொன்றும் 02 சேமிப்புக் கணக்குகளும் பேணப்பட்டிருந்தன.

## 10. தலைப்பு 325 – இலங்கை கடற்கரைப் பாதுகாப்புத் திணைக்களம்

### 10.1 கணக்காய்வின் நோக்கெல்லை

இலங்கை கடற்கரைப் பாதுகாப்புத் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 ஆகஸ்ட் 08 ஆந் திகதி பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 10.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து

விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 10.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் இலங்கை கடற்கரைப் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று இவ்வறிக்கையின் (அ) இலிலுள்ள பொது அவதானிப்பு மற்றும் கீழே 10.4 இலிருந்து 10.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

#### (அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்களைப் பேணியிருக்காமை

திணைக்களத்தினால் கீழே காட்டப்பட்டள்ள பதிவேடுகள் பேணிவரப்பட்டிருக்கவில்லை.

| பதிவேட்டின் வகை | தொடர்புடைய பிரமாணம் |
|---|---|
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 இன் 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| கணனி துணைச்சாதனங்கள் மற்றும் மென்பாகங்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

### 10.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### 10.4.1 கூட்டிணைந்த திட்டம்

கடற்கரைப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் 2012 ஆம் ஆண்டிலிருந்து எதிர்வரும் 05 ஆண்டுகளிற்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த கூட்டிணைந்த திட்டத்தில் குறித்த இலக்குகள் அடையப்பட வேண்டிய காலப்பகுதி, பொறுப்புடைய உத்தியோகத்தர்கள் விபரம், குறித்த விபரங்கள், திணைக்களத்தின் பலம், பலவீனம், வாய்ப்புக்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**10.4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

மேற்படி 10.4.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்தவாறு தயாரிக்கப்பட்டிருந்த கூட்டிணைந்த திட்டத்திற்கமைய வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அச் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் குறிக்கோள்கள் மற்றும் அவை அடையப்படவேண்டிய காலஎல்லைகள் திருத்தமான முறையில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**10.4.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

2002 செப்தம்பர் 12 மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கைகளின் பிரகாரம் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியொன்றுடன் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை 2013 யூன் 10 ஆந் திகதி வரை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

**10.4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை செயற்படுத்தல்**

2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/09/01 ஆம் இலக்க முகாமைத்தவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை தாபித்து காலாண்டுக்கு ஒன்று என்ற வீதத்தில் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும், 2012 ஆம் ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை..

**10.5 சர்ச்சைக்குரிய கொடுக்கல்வாங்கல்கள்**

2011 நவம்பர் 25 ஆந் திகதி இலங்கை கடற்கரை பாதகாப்புத் திணைக்களத்தினால் தனியார் நிறுவனமொன்றுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் படி உடன்படிக்கையிடப்பட்ட பெறுமதியில் 10 சதவீதம் அல்லது ரூபா 228,500 தொகையான செயலாற்றல் பிணைமுறியொன்றை பெற்றுக்கொள்வதற்கு இணங்கப்பட்டிருந்த போதிலும், குறித்த வழங்குனரால் ரூபா 100,000 தொகையான செயலாற்றல் பிணைமுறியொன்றே வழங்கப்பட்டிருந்தது.

**10.6 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

**அதிகாரமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

இலங்கை கடலோரப் பாதுகாப்பு திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் 03/2011 ஆம் இலக்க விஞ்ஞாபனத்தின் படி உத்தியோகபூர்வ நேரடி தொலைபேசி வசதிக்கான மாதாந்த திரட்டிய எல்லையின் கீழ் கடலோர பாதுகாப்பு ''ரோஹன'' மிரிஸ்ஸ பொது தொலைபேசிக்கான மாதாந்த திரட்டிய கட்டணம் ரூபா 8,000 என எல்லை விதிக்கப்பட்டிருந்த போதிலும், 2012 பெப்ரவரி மாதத்திற்கான தொலைபேசி பட்டியல் ரூபா 10,378 ஆகக் காணப்பட்டது.

## 10.7 இழப்புக்களும் நட்டங்களும்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் வெளிப்பட்ட நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான அவதானிப்புகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

(அ) இலங்கை கடலோரப் பாதுகாப்பு திணைக்களத்திற்கு சீருடைகளை தைப்பதற்காக நிறுவனமொன்றை தெரிவுசெய்கையில் முதலாவது கூறுவிலை கோரலில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலை மனுக்கள் நிராகரிக்கப்பட்டு இரண்டாவது சந்தர்ப்பத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலைமனுக்கள் ஏற்றுக்கொளள்ப்பட்டிருந்தமை காரணமாக திணைக்களத்திற்கு ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 140,000 ஆகும்.

(ஆ) இலங்கை கடலோரப் பாதுகாப்பு திணைக்களத்திற்காக கட்டில் விரிப்புக்கள், துவாய்கள், தலையணை உரைகள் போன்றவற்றை கொள்வனவு செய்கையில் கூறுவிலைகளைச் சமர்ப்பித்திருந்த நிறுவனத்திடமிருந்து மொத்த அளவினையும் கொள்வனவு செய்யாது 7 தடவைகள் கூறுவிலைகள் கோரப்பட்டு 7 ஆவது குறைந்த விலைமனுவைச் சமர்ப்பித்திருந்த நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை காரணமாக திணைக்களத்திற்கு ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 78,000 ஆகும்.

## 10.8 மனித வள முகாமைத்துவம்

இலங்கை கடற்படையில் சேவையில் ஈடுபட்டுள்ள 42 உத்தியோகத்தர்களும் 743 கடற்படையினரும் பதவியணியினராக திணைக்களத்தில் சேவையாற்றிய போதிலும் திணைக்களத்திற்குத் தேவையான பதவியணியினரை திறைசேரியின் ஊடாக அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.